விலை ரூபா 2-00 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 வைகாசி 25 நம்ளான் 29 இதழ் 117
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (8—6—86)

விசேஷ பொலிஸ் பிரிவினர்

## கொழும்பில் தீவிர தேடுதல் வேட்டை

### 350 தமிழர் கைது!

(கொழும்பு)

கொழும்பில் தமது உறவினர்களின் வீடுகளிலும் மற்றும் விடுதிகளிலும் தங்கியிருந்த தமிழர்களில் சுமார் 350 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்,

கொழும்பில் தங்கியிருப்பதற்குரிய காரணம் காட்டாமையே இவர்கள் கைது செய்யப்பட்டமைக்கான காரணம் என்று பொலிஸ் மா அதிபர் திரு. சிறில் ஹேரத் தெரிவித்துள்ளார்,

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளின் தலைமையில் சுமார் அறுநூறு பொலிஸார் கடந்த புதன்கிழமை நள்ளிரவு தொடக்கம் நேற்று முன்தினம் சனிக்கிழமை வரை கொழும்பு நகரைச் சுற்றி வளைத்து தீவிர தேடுதல் வேட்டையில் இறங்கினார்கள்.

கொழும்பு நகர் பகுதியில் பரவலாக இடம்பெற்ற இத்

(12ம் பக்கம் பார்க்க)

RECEIVED 09-6-
SRI LANKA
LIBRARY

# கிளிநொச்சியில் தொடரும் தாக்குதல்: பெண்கள், சிறுவர், வயோதிபர் உட்பட ஐம்பதுபேர் பலி

## அகதிகளாக 2000 மக்கள் தஞ்சம்; உணவுப்பொருள்கள் தட்டுப்பாடு

(நமது நிருபர் கே. வி. கே. திருலோகமூர்த்தி)

கிளிநொச்சியில் தொடர்ந்து நாலாவது நாளாக நேற்று இராணுவத்திற்கும் போராளிகளுக்குமிடையில் நேரடிப்போர் நடைபெற்றுவரும் அதேவேளை தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் போர் விமானக்குண்டு வீச்சிலும் 'ஷெல்' தாக்குதலினாலும சிறுவர், பெண்கள், வயோதிபர் உட்பட சுமார் ஐம்பதுபோ பலியாகி உள்ளனர்; பலர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை நகரில் மகாவித்தியாலயம் 'கிளிநொச்சி கிளினிக்' என்னும் தனியார் மருத்துவமனை முதலான இடங்களிலும் இராணுவம் நிலைகொண்டுள்ளது.

கிளிநொச்சி நகருக்கு சமீபத்தில் உள்ள பகுதிகளில் பல பொதுமக்களது சடலங்கள் பலியான இடங்களிலேயே மீட்கமுடியாத நிலையில் கிடக்கின்றன.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மட்டும் மூன்று குண்டு வீச்சு போர்விமானங்கள் அதிகாலை முதல் மாலைவரை இடைவிடாது குண்டுமாரி பொழிந்சன. இதில் 6ம் வாய்க்கால, திருநகர், கணேசபுரம், கனகபுரம், உருத்திரபுரம் முதலான பகுதிகளைச்சேர்ந்த பொதுமக்கள் பலியாகியும், படுகாயம் அடைந்தும் உள்ளர்ன.

### காயமடைந்தவர் மரணம்

கணேசபுரத்தைச் சேர்ந்த கூட்டுறவு ஊழியரான சிவஞானம் என்பவர் குண்டுவீச்சால் படுகாயமடைந்து வண்டில் ஒன்றில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்படுகையில் மீண்டும் விமானம் ஒன்று குண்டுகளை வீசவே வண்டிலை ஓட்டி வந்தவரும் படுகாயமடைந்தார். மாடு ஒனறும் இச்சம்பவத்தில் இறந்து விடவே காயங்

(11-மபககம் பார்க்க)

## இரு பத்திரிகை ஊழியர் கைது

(கொழும்பு)

கொழும்பில் குண்டுபற்றிய வதந்திகளைப் பரப்பினர்கள் என்ற சந்தேகத்தின்பேரில்

(11ம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சிச் சம்பவம்

## இராணுவத்தினர் பலர் பலி; போராளிகள் ஐவர் மரணம்

### புலிகள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''கிளிநொச்சிப் பகுதியில் கடந்த நான்கு நாட்களாக இராணுவத்தினருக்கும் எமது 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கப்போராளிகளுக்கும் இடையே ஏற்பட்ட நேரடி மோதலில் பல இராணுவத்தினர் பலியானார்கள, பலர் படுகாயமடைந்தனர், எமது இயக்கத்தின் தரப்பில் 5 போராளிகள் வீரமரணமடைந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு' விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்ப் பட்டுள்ளதாவது:

''கிளிநொச்சிப்பகுதி எமது கட்டுப்பாட்டினுள் இருக்கும் அதே வேளை இம்மண்ணின் விடிவிற்காக ஐவர் மரணித்துள்ளனர்.

(11-ம் பக்கம் பார்க்க)

## "இராவணும் சுட்டதில் காயமடைந்தேன்"

(யாழ்ப்பாணம்)

''திருநகர் ஊடாக நடைபவனியாக வந்த ஆயுதப் படையினர் சுட்டபோது வீட்டுக்குள்ளிருந்த நான் சூடுபட்டுக்காயமடைந்தேன்''

துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றுஅனுமதிக்கப்பட்ட திருநகரைச்சேர்ந்தஎன் ஜெயசீலன் 22வயது) இவ்வாறு கூறினர்.

இவருடன் நால்வர் நேற்று கிளிநொச்சியிலிருந்து அம்புலன்ஸ் மூலம்வந்து யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

ஜெயசீலன் மேலும் கூறியதாவது: '.நேற்று முன் தினம் காலை இரண்டு போர் விமானங்கள் வட்டமிட்டுத் தாக்குதல் நடத்தியது. இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி முகாமிலிருந்து சுமார் 300 இராணுவததினர் திருநகர் நோக்கி வந்தனர், வரும் போது வழியில் சுட்டபடி வந்தவர்கள் ஜெயந்திநகர் நோக்கி சென்றனர். அவர்கள்

(11ம் பக்கம் பார்க்க)

## பண்ணை நேரடி மோதலில் இரு இராணுவத்தினர் பலி

### 'ஷெல்' தாக்குதலில் வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை முகாமிலிருந்து வெளிவந்த இராணுவத்தினருக்கும் போராளிகளுக்குமிடையே ஏற்பட்ட நேரடி மோதலில் இராணுவதரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்சப்படுகிறது

நேற்றுமுன்தினம்இரவு 9-15 மணியளவில் கோட்டை முகாமிலிருந்து இராணுவத்தினர் பண்ணையருகே ரோந்து சென்று கொண்டிருந்த பொழுது போராளிகள் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனரென்றும் இதனைத் தொடர்ந்து இராணுவத்தினருக்கும் போராளிகளுக்கும் இடையே துப்பாக்சிச்சூட்டுச்சமர் இடம் பெற்றது என றும் கூறப்படுகிறது. இராணுவத் தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்சப்படுகிறது.

அரசாங்க அறிக்கையின்படி இத்தாக்குதல் சம்பவத்தில் இரு இராணுவத்தினர் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது

இச் சம்பவத்தின் பின்னர் கோட்டை முகாமிலிருந்து யாழ். நகர்ப்புறம் நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. கொட்டடி நபசிவாயம் வித்தியாலயத்துக்கு அருகாமையிலுள்ள

(11ம் பக்கம் பார்க்க)

அரசு அறிவிப்பு;

## ஆயுதப்படையினர் ஒருவர் பலி; மூவர் காயம்

(கொழும்பு)

கிளிநொச்சியில் கால் நடையாக ரோந்து சென்ற பாதுகாப்புப்படையினர் மீது தீவிரவாதிகள் தாக்குதலை மேற்கொண்டபொழுது படையினர் தரப்பில் ஒருவர் பலியா

(11-ம் பக்கம் பார்க்க)

நல்லூரில்

## நாளை நீதிமன்ற விசாரணை

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் நாளை திங்கட்கிழமை காலை யாழ். நீதிமன்ற விசாரணை நடைபெறும்.

நல்லூர் முத்திரைச் சந்தியிலுள்ள மேல்மாடிக் கட்டடம் ஒன்றில் யாழ். நீதிமன்றம் நேற்றுமுன்தினம் முதல் இடம் மாற்றப்பட்டுள்ளது.

காயமடைந்த

## பத்துப்பேர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் 'ஷெல்' தாக்குதலிலும், துப்பாக்கி சூட்டில் காயமடைந்த 10 பேர் நேற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியிலிருந்து அம்புலன்ஸ் மூலம்இவர்கள் நேற்று நண்பகல் எடுத்து வரப்பட்டனர்.

ஆர். செல்வராசா (15வயது) கிளிநொச்சி எஸ். வேதநாயகம், (30வயது) திருநகர் எஸ். இராசதுரை (23வயது), விஸ்வமடு. என் ஜெயசீலன் (22வயது) கிளிநொச்சி என். பரியதாஸ் (52 வயது), கிளிநொச்சி, எம். சிதம்பரம் கிளிநொச்சி)

சதீஸ் (20 வயது, கிளிநொச்சி) குகன் 16 வயது கிளிநொச்சி), ஜேம்ஸ் (19வயது

(11ம் பக்கம பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

பம்பாய் வெங்காயவிதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C2589)

முல்லைத்தீவு அலம்பில் வீதி 3ம் கட்டையில் வசதியுடன் கூடிய வீடும் 13 ஏக்கர் தென்னந்தோட்டமும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சுப்பலைற் சார்ஜஸ், பிரதானவீதி, முல்லைத்தீவு. (C 2704)

அச்சகம் அமைப்பதற்குரிய அச்சுயந்திரம் உட்பட சகல உபகரணங்களும் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்க. எந்நேரமும் பார்வை இடலாம். 419, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (C2720)

சங்கானை சண்டிலிப்பாய் எல்லையில் பள்ளியிற் காணி துணுக்கன் சீமா 21½ நிலப்பரப்பில் பனை, தென்னை, மா, கிணற்றுடன் பிரித்தும் விற்கப்படும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: மணி மாளிகை, சங்கானை அல்லது 302/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 2724)

சுழிபுரத்தில் மொத்தமாகவும், சில்லறையாகவும் சுத்தமான பசுப்பால், தயிர் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு[illegible] முகவரி: கி. [illegible], விக்டோரியா கல்லூரிக்கு அருகில், மத்திய வீதி, சுழிபுரம், அல்லது து. தெய்வகுமார், வழக்கம்பரை அம்மன் கோவில், தொல்புரம். (C2728)

Love Birds பல வர்ணங்களில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. J. A. Andrew, நில அளவையாளர், 16/2, முதலாம் ஒழுங்கை, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (C 2737)

ஆண் பிள்ளைகளுக்குரிய சிறிய ஏசியா [Asia] சைக்கிள் நல்ல நிலையில் உடன் விற்பனைக்கு உண்டு. விபரம்: 23, கடைச்சாமி வீதி, நீராவியடி. யாழ்ப்பாணம். (C 2766)

குளிர்சாதனப் பெட்டி, பெரிய சாப்பாட்டுமேசை, கதிரைகள், தேக்கு அல்மாரி, Kenwood chef, ஸ்ரீல் அல்மாரி, Iron safe, Show case, Garden கதிரைகள், 20'' Colour T.V. ஸ்ராண்டுடன் மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. பத்மநாதன், ஆடியபாதம் றோட், திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்குமிடையில். (C 2740)

வெளிநாடுசெல்பவரின் வீட்டுத் தளபாடங்கள், அல்மாரி, மெத்தை, கட்டில், மேசை கதிரைகள், ஹோல் செற்றி, குசினி உபகரணங்கள், சிலின்டர், கசற்றெடியோ, Office table, Formica மேசை, Verandah கதிரைகள், கம்பளங்கள், Carpets, பெட்சீற், கிளாஸ் வகைகள், English Dinner Tea Sets, கிடாரங்கள், Pyrexware புத்தக அல்மாரி மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. 125, பிரதான வீதி, யாழ்ப்பாணம் டேவிட் றோட் முன்பாக; Holy Cross மடத்துக்கு அருகில். (C 2739)

## விற்பனைக்கு

EN போட் பிறிபெக்ற் கார் மிகவும் நல்ல நிலை - பல வருட கால தனி பாவிப்பிலிருந்தது உடனடி விற்டனைக்கு. 12/3, வைமன் வீதி, யாழ்ப்பாணம். [C 2748]

திருநெல்வேலி பாற்பண்ணையிலிருந்து ½ மைலுக்குள் 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. வீதியில் மின்சார வசதி உண்டு. விபரங்களுக்கு: ஹிரி ஹரன் என்றபிறைஸ் 337, பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்தி, யாழ்ப்பாணம். C 2761

புதிய தமிழ், ஆங்கிலப் படங்கள் பதிவுசெய்யப்பட்ட நஷனல் வீடியோ கசற்றுக்கள் மொத்தமாக [70] உடன் விற்டனைக்குண்டு. விபரங்களுக்குத் தொடர்பு கொள்க 417, ஸ்ரான்லிவீதி (பெற்றோலியம் கூட்டுத்தாபனம் முன்பாக), யாழ்ப்பாணம். (C 2769)

உரும்பராயில் சகாய விற்பனை 9, 10-6-86 ல் உரும்பராய் இந்துக்கல்லூரி பவள விழா அரங்கில் மில்க்வைற் காட்சிச் சாலையில் மில்க்வைற் தயாரிப்புக்களை ரூ. 15/-க்கு வாங்கும் அன்பர்களுக்கு அழகிய பொலித்தீன் பாக்கும், வீட்டுத் தோட்டத்திற்குரிய கீரை விதைகளும், அறிவுநூல்களும் இலவசமாக வழங்கப்படும். மேலுறைகளைச் சேகரித்து வைத்திருக்கும் அன்பர்கள் அங்கு கொடுத்து பெறுமதி வாய்ந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். [A 823]

## தேவை

யாழ்ப்பாணம் றோயல் டிஸ்பென்சரிக்கு நல்ல ஆங்கில கணித அறிவுள்ள பெண் உதவியாளர்கள் உடன் தேவை. நேரில் வரவும், A 819

8½ அடி உயரமுள்ள பிடவைக் கடைக்குரிய அலுமாரிகள் தேவை. தொடர்பு:- கணேசன் ஸ்ரோர்ஸ், 63, K. K. S. Road, Jaffna. [C 2756]

குழந்தைப்பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் தேவை; சம்பளத்துடனும் சகல வசதிகளுடனும் நல்ல வாய்ப்பு உண்டு தொடர்பு:- பெற்று எஸென்ஸ் சப்ளையர்ஸ், 223, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [C-2755]

சேவிஸ் ஸ்ரேசன் புதிதாக அமைப்பதற்கு தேவையான சகல உபகரணங்களும் எமக்குத் தேவைப்படுகின்றது. விற்பனைக்கு இருப்பின் எம்மிடம் தொடர்புகொள்ளவும்: விளம்பர இலக்கம் A 815, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (A 815)

எமது நிறுவனத்திற்கு பெண் லிகிதர் ஒருவர் தேவை. ஓரளவு ஆங்கில அறிவுடன் பிரதான வீதியின் சுற்றாடலில் வசிப்பவர் விரும்பத்தக்கது. தொடர்பு: சதீஸ் ரெக்கோடிங் ஸ்ருடியோ 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். C 2768

## தேவை

பெண் லிகிதர்கள் ஆண் வெளிக்களச் சேவையாளர்கள் ஆகியோருக்கான வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படவுள்ளன. 09-06-1986 திங்கட்கிழமை கல்வித்தகமைகள் சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் நேரில் வரவும் தொடர்பு: Manpower Multi-service and Travel Consultant 533, Stanley Road இராசாவின் தோட்டச்சந்தி) Jaffna. C 2707

பிளாஸ்ரிக்கில் கதிரை பின்னக்கூடியவர்கள் உடனே தொடர்புகொள்ளவும். பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். முழு நேர அல்லது பகுதிநேர வேலை. நல்ல வருமானமுண்டு. ஷோபா சொப்பிங் சென்றர், 603, காங்கேசன்துறை வீதி (நாவலர்சந்திக் கண்மையில்), யாழ்ப்பாணம். (A 817)

## சேவை

தளபாடங்கள் மரக்கடைச்சல் வேலைகள் நிலை, யன்னல் கிறில் வேலைகள் முதலியன ஓடருக்கு செய்துகொடுக்கப்படும். தொடர்பு: அபிராமி மரத்தொழிற்சாலை (ஈழநாடு அருகில்) 75, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். C 2705

## கல்வி

G C E (O/L) ல் கட்டாய பாடமாகிய கணிதத்தில் சித்தி யெய்தாதவர்களுக்கு 17 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்கு வீடுகளிற் சென்று கற்பிக்கப்படும். மற்றும் [O/L], [A/L] சகல பாடங்களும் பட்டதாரி ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். கடிதத் தொடர்பு கொள்ளவும் அல்லது காலை 8.00 மணிக்குள் வீட்டில் சந்திக்கவும். ஆறுமுகநாதன், No 10, சச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குழி (C- 2765)

இந்தியாவில் உயர் கல்வி, தொழிற் கல்வி பயில விரும்பும் மாணவர்களுக்கும் G.C.E (A/L) 3 பாடங்களுடன் B.Com பயில விரும்பும் மாணவர்களுக்கும் கல்லூரி அனுமதியும் உணவு, தங்குமிட வசதியும் எம்மால் செய்து கொடுக்கப்படும். விபரங்களுக்கு ஹிரிஹரன் என்ரபிறைஸ், 337, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (C- 2760)

### முதலாவது பிறந்ததின வாழ்த்து

#### செல்வி ஆரணியா

சதானந்தன் ஆரணியா தமது முதலாவது பிறந்த நாளை இன்று தமதுகொக்குவில் இல்லத்தில் குதூகலமாக கொண்டாடுகிறார். இவரை அம்மா, அப்பா, அம்மம்மா, அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா, சித்திமார், சித்தப்பாமார், மாமா, மாமிமார் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க வென வாழ்த்துகிறார்கள். C 2754

## பயிற்சி

ரேடியோ, டேப் ரெக்கோடர், டெலிவிசன் றிப்பயறிங் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப் படுகின்றன விபரங்கட்டு எலக்ரோனிக் ரெயினிங் சென்றர், வி. நித்தியானந்தன், கல்வளை, சண்டிலிப்பாய். (C- 2744)

## தவறிவிட்டது

திரு. சொக்கலிங்கம் இராசரத்தினம், குமரகோட்டம், கோண்டாவில் என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [C-2763]

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திற்கு அருகாமையில் சகல வசதிகளுடன் மாணவிகள் வதிவிடம் உண்டு. தொடர்பு: க. கதிர்காமலிங்கம், 32, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (C2759)

## மணப்பந்தல்

யாழ்ப்பாண கிறிஸ்டியன் வேளாள ஆசிரியைக்கு 34-42 வயதுக்குட்பட்ட T. A பட்டதாரி மணமகன் தேவை. Accountat சகோதரனுக்கு 34 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. மாற்றுச் சம்பந்தத்தை யோசிக்கலாம். கிறிஸ்டியன் அல்லாதோரும் விண்ணப்பிக்கலாம். எம்மிடம் சகல இன மதத்திலும் மணமக்கள் இருக்கிறார்கள். விண்ணப்பிக்கவும். மங்கள ஏஜென்ஸி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [C 2764]

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், காரைநகர்.

### வெற்றுச் சாக்கு கேள்விப்பத்திர மூலம் விற்பனை

காரைநகர் ப. நோ. கூ. சங்கத்தின் 2500 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு உண்டு. சாக்குகளை பெறவிரும்புவோர் ரூபா 250/- ஒப்பந்த முற்பணமாக வைப்புச் செய்து தலைமைக் காரியாலயத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற்று 16-6-86 திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்,
ப. நோ. கூ. சங்கம்,
காரைநகர்.
A 820

## பல்கலைக்கழக கலைப்பீடப் படைப்பு

(யாழ்ப்பாணம்)

வருடம் மும்முறை வெளிவரும் பல்கலைக் கழக கலைப் பீடப் படைப்பான 'சிந்தனை' ஒழுங்காகவெளிவந்து கொண்டிருக்கிறது. 'சிந்தனை' தொகுதி 11 இலக்கம் 2 வெளிவந்துவிட்டது. இச் சஞ்சிகையில் கலைப்பீடப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களின் தரமான படைப்புக்கள் பல்வேறு துறைகளில்காணப்படுகின்றன இக் கட்டுரைகள் ஆய்வறிவாளர்களுக்குப் பயன்தரவல்லன; பாடசாலை மாணவர்களுக்கும் ஆய்வறிவை ஊட்டும் வகையில் எழுதப்பட்டவை. இக் கட்டுரைகள் பல்திறத்தினருக்கும் ஏற்றவை.

தமிழில் தரமான கட்டுரைகள், நூல்கள் வெளிவராத காலகட்டத்தில் 'சிந்தனை'' தமிழ் அறிவு உலகின் அறிவுப்பசிக்கு ஏற்ற ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. 'சிந்தனை'யின்தொடர்ச்சியான வெளியீட்டிற்கு வாசகர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் அவசியமானதாகும்.

''சிந்தனை''

### ஈராண்டு நினைவஞ்சலி



அமரர் அ. வ. பாலசுப்பிரமணியம் [B. A.]
(முன்னாள் தலவாக்கல ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை அதிபர்)

மலர்வு: 26-08-1929
உதிர்வு: 31-05-1984
திதி: 08-06-1986

எங்கள் குடும்பத்தலைவனாய் ஒளிவீசி நின்று எம்மைக் காத்த அன்புத் தெய்வமே அப்பா! முழங்கி ஒலித்த வானொலியின் மரணச் செய்தி அதிர்ச்சி நீங்குமுன் ஈராண்டுகள்ஓடிமறைந்து விட்டனவே.

உங்கள் ஆத்மா சாந்தியடையவும், நீங்கள் தெய்வமாக எம்மை வழிநடத்தவும் இறைஞ்சுகின்றோம்.

அன்புக்குடும்பத்தினர்.
C 2717

### வாடகைக்கு

சகல வசதிகளுடனும் ஈழநாடு காரியாலயத்திற்கு அண்மையில் இரண்டு அறைகள், ஒரு ஹோல், ஒரு பல்கனி கொண்ட 1600 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட மேல்மாடி கட்டிடம் வாடகைக்கு உண்டு.

விண்ணப்பங்கள் 15-06-86 வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

விளம்பர இல. A 725,
(A725) C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் அணுஆலை விபத்து:

## நிபுணர்களின் கணிப்பீடு தவறு!

### எதிர்காலத்தில் மோசமான விளைவுகள் தோன்றுமாம்

**லண்டன், ஜூன். 7**

**"செர்நோபிலில் அண்மையில் இடம் பெற்ற அணுஆலை விபத்தினால் எதிர்வரும் நாற்பது ஆண்டுகளில் சுமார் 1 லட்சத்து 15 ஆயிரம் பேர் புற்று நோயால் இறக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது."**

அணுசக்தி சம்பந்தப்பட்ட செய்தி ஸ்தாபன மான்று ஆம்ஸ்ரடாம் நகரில் விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இந்த அச்சம் தெரிவிக்கப்பட்டுளளது.

அணுசக்தி தொடர்பான ஆய்வினை ஐரோப்பிய நாடுகளில் நடத்தி முடித்துள்ள இந்த ஸ்தாபனம் செர்நோபில் அணுஆலை விபத்துக் குறித்து பெரும்பாலான நிபுணர்கள் மிகவும் குறைவாகவே மதிப்பீடு செய்துள்ளதாகவும் குறை கூறியுள்ளது.

**உலகச் செய்திகள்**

அணுசக்திக்கு எதிரான இந்த இயக்கம், இரண்டு பாதுகாப்புக் கவசங்களால் செர்நோபில் அணுஆலை அமைக்கப்பட்டுள்ளது போன்றே ஐரோப்பாவிலுள்ள ஏனைய அணுசக்தி ஆலைகளும் அமைந்துள்ளன என்றும் கூறியுள்ளது.

இந்த அணுசெய்தி இயக்கம் பிரான்ஸ், அமெரிக்கா, அவுஸ்திரேலியா உட்பட பன்னிரெண்டு பணியகங்களைவைத்து இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. [ரா]

அங்கோலா மீதான

# தெ. ஆபிரிக்க தாக்குதல்; இந்தியா பலத்த கண்டனம்

புதுடில்லி, ஜூன் 7

"ஆபிரிக்க நாடுகளை நிலைகுலையச் செய்யும் வகையில் தென்னாபிரிக்கா தவணை முறையில் மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையே அங்கோலா மீதான தாக்குதலாகும்" என்று இந்தியா தென்னாபிரிக்க அரசுமீது கண்டனம் தெரிவித்துள்ளது.

அங்கோலா துறைமுகம்மீது தென்னாபிரிக்கா நடத்தியுள்ள தாக்குதல் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இந்தியா இந்தக் சண்டனத்தை தெரிவித்துள்ளது.

தென்னாபிரிக்கா நடத்திவரும் இத்தாக்குதல்களை தடுத்து நிறுத்த ஐ நா. காலதாமதமற்ற முறையில் உரிய நடவடிக்கைகளைமேற்கொள்ள வேண்டுமென்றும் அந்த அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நமீப் துறைமுக தாக்குதல் குறித்து பெரும் அதிர்ச்சி அடைத்துள்ளதுடன் தமது ஆழ்ந்த அனுதாபத்தையும் அங்கோலாவிற்கு இந்தியா அறிவித்துள்ளது.

சர்வதேச சமாதானத்துக்கும், அமைதிக்கும் சவாலாக இருக்கும் பிறிட்டோரியா அரசுக்கு எதிராக கட்டாய தடைகளை விதிப்பதைத் தவிர வேறு மாற்று எதுவும் கிடையாது என்றும் இந்தியா அவ்வறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை அங்கோலா மீதான இந்த தென்னாபிரிக்கத் தாக்குதலில் எண்ணெய் மற்றும் துறைமுக அமைப்புக்கள் பலத்த சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. [ரா]

# ஆபிரிக்க மாணவர்கள் சீனாவில் ஆர்ப்பாட்டம்

பீக்கிங், ஜூன். 7

சீன மாணவர்களால் நடத்தப்பட்ட இனவேறுபாட்டு மாநாட்டை எதிர்த்து சுமார் இருநூறுக்கும் அதிகமானஆபிரிக்கமாணவர்கள் ஆர்ப்பாட்டமொன்றினை மேற்கொண்டனர்.

பீக்கிங் நகரத்தில் இடம் பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின் போது "வெளிநாட்டவர்களுக்கு சீனாவில் சுதந்திரமில்லை" என்ற சுலோக அட்டைகளும் தாங்கிச் செல்லப்பட்டதுடன் சீன அரசுக்கு எதிரான கோஷங்களும் விடுக்கப்பட்டன. ஆர்ப்பாட்டக்காரர்களுடன் சீன பொலிஸ் அணியொன்றும் சென்றது. ஆர்ப்பாட்ட இறுதியில் ஆபிரிக்க மாணவர்களால் சீனக் கல்வி அமைச்சரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

தங்களால் கையளிக்கப்பட்ட பத்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்படல் வேண்டும் என்று ஆபிரிக்க மாணவர்கள் தெரிவித்தபோதும், அதற்கு செவிசாய்க்கப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டது. [ரா]


**Lipton**

# லிப்டன் லாவோஜி பிரியர்களுக்கோர் நற்செய்தி

புதிய குறைந்த விலையில், அதி நிறைந்த சுவையுடன் "லிப்டன்" வாசகம் பொறிக்கப்பட்ட அலுமினியம் சுற்றுத்தாளில் அடைக்கப்பட்டு புதிய பொலிவுடன் "லாவோஜி" தேயிலைப் பக்கட்கள் இப்பொழுது எங்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

போலி லிப்டன் லாவோஜி பக்கெட்டுகள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதால் லாவோஜி தேயிலை வாங்கும்போது, மேற்கூறப்பட்ட முக்கிய அம்சங்களை அவதானித்து அசல் லாவோஜியை உங்கள் மொத்த, சில்லறை, வியாபாரிகளிடம் பெற்றுக் கொள்ளுங்கள்.




புதிய விலை: ரூபா 3/60 (50 கிறும்)

**லிப்டன் சிலோன் லிமிட்டெட்,**
த. பெ. எண் 86,
கொழும்பு.

**லிப்டன் லவோஜி**
அதி சிறந்த தேயிலைத் தூள்

A 493


# பொலிஸ் சுட்டதில் 4 பேர் பலி

புதுடில்லி, ஜூன்-7

கர்நாடகத்தில் பெல்காம் நகருக்கருகில் ஆர்ப்பட்டக் கும்பலொன்றின் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் நான்குபேர் பலியாகினர். பலர் காயமடைந்தனர்.

ஐயாயிரம் பேரைக்கொண்ட ஆாப்பாட்டக் கும்பலொன்றினை கலைப்பதற்கு பொலிசார் முற்பட்டபோதே சலகம் மூண்டதாகவும், இதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போதே இவர்கள் பலியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தில் பொலிஸ் துணைச் சுப்பிரின்டன் ஒருவர் உட்பட முப்பது பொலிஸார் காயமடைந்தனர். [ரா]

# 1- வது டெஸ்ட்: இந்தியா 83— 1

(லண்டன்)

இங்கிலாந்துக்கும் இந்தியாவுக் மிடையில் நடைபெறும் முதலாவது டெஸ்ட்கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்துக் கோஷ்டி முதல் இன்னிஸில் மொத்தம 294 ஓட்டங்களைப் பெற்றது. சேட்டன் சர்மா சிறப்பாசப் பந்து வீசி 64 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

2 ம்நாள் ஆட்டம் முடிவடையும்போது இந்தியா முதல் இன்னிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 83 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. (வி)

# இன்று வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சிவம் எழுதிய சைவாலயக் கிரியைகள் நூல் வெளியீட்டு விழா இன்று மாலை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சமகால நிகழ்வுகளைச் சித்தரிக்கும் 'ஓவிய அரங்கேற்றம்'" பார்வையாளரின் சில எண்ண வெளிப்பாடுகள்

ஓவியத்துறை போதிய அக்கறையையும், வளர்ச்சியினையும் பெற்றிராத துறையாகவே எம்மிடையே இருந்து வந்திருக்கிறது. இந்த நிலையை மாற்றமுயலும் செயற்பாடுகள் சில சமீபத்தில் நிகழத்தொடங்கியுள்ளன. சமீபத்தில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற 'ஓவிய அரங்கேற்றம்' இத்தகைய செயற்பாடுகளில் ஒன்றேயாகும். 'யாழ். பல்கலைக்கழகக் கலாசாரக் குழுவினர்' இதனை ஒழுங்கு செய்திருந்தனர் ஓவியர்களான திரு. அ. மாற்கு, திரு. செ. சிவப்பிரகாசம் ஆகியோரின் மாணவியரான செல்விகள் நிர்மலா கோபாலசாமி, அருந்ததி சபாநாதன், சுகுணு தம்பித்துரை ஆகியோரின் 135 ஓவியங்கள் இந்த அரங்கேற்றத்தில் இடம் பெற்றன. இந்த அரங்கேற்ற மண்டபத்தில் வைக்கப்பட்ட குறிப்புப் புத்தகங்களில் பார்வையாளர்கள் தெரிவித்தகருத்துக்களில் ஒருபகுதி, இங்குதிரட்டித்தரப்படுகின்றது:

"தொலைக்காட்சியில் அடிக்கடி ஓவியங்களைப் பார்க்கும் பொழுதெல்லாம் எம் தமிழ் மக்களுக்குஇப்படியான காலம் எப்போது வரும் என்று ஏங்கியதுண்டு. அதுவிரைவிலே தீர்ந்து போய்விடும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. உங்கள் ஓவியங்கள் மிகவும் கவர்ச்சிகரமானவை. பெண்கள்என்ற நிலையில் இதைவிட நீங்கள் நிறைய ஓவியங்கள் தீட்டி, எம் போன்ற ரசிகைகளைக் கவர்வீர்கள் என நினைக்கின்றேன்".

பொ. பொன் அரசி'
யாழ். பல்கலைக்கழகம்.

"திருவாளர்கள் மாற்கு, சிவப்பிரகாசம் ஆகியோரின் மாணவிகள் மூவரின் கன்னி முயற்சி உண்மையில் வரவேற்கக் கூடிய முயற்சி. இளங்கலைஞர்களின் சில ஓவியங்களில் அனுபவமுதிர்ச்சி தென்படுவது அவர்களின் திறமையைவெளிக்காட்டுகிறது. குறிப்பாக நிர்மலா கோபாலசாமியின் ஓவியங்களில் பிரதிமை, மழைமப்பு, நூல்நிலையம், கன்னிகா, முதுமை போன்றவையும்; அருந்ததி சபாநாதனின் எதிர்பார்ப்பு, சிவப்புக்கப்பல், பிரதிமை, பூக்கள், புத்தர், போன்றவையும்; சுகுணு தம்பித்துரையின் விடிவிற்கு முந்திய மரணங்கள், யாழ்.பெரிய சேமக்காலை, தெருக்கூத்து, தன்பிரதிமை, படகுகள், தாயும் குழந்தையும் போன்ற ஓவியங்களையும் குறிப்பிடலாம். இந்த ஓவியங்களில் உள்ள வர்ணத்துணிவும், எண்ண வெளிப்பாடும், வர்ணத்தைக்கையாண்ட விதமும் மிக நேர்த்தியாகக் காணப்படுகின்றன.

சில ஓவியங்களில் பிற படைப்பாளிகளின் பிரதிபலிப்பைக் கணிக்கக் கூடியதாக இருப்பினும், அதை ஒரு குறைபாடாக எடுத்துக் கொள்ள முடியாது. சுய எண்ணவெளிப்பாடும், செய்முறையும் இன்னும் வளர்ந்தால் எதிர்காலத்தில் தலைசிறந்த ஓவியர்களாகத் திகழ்வர் என்பது திண்ணம். வாழ்த்துக்கள்!"

ஆ. இராசையா.
(ஓவியர்)

"சிந்தனைகளின் வெளிப்பாடுகளையெல்லாம் சித்தரித்துக் காட்டும் பாங்கிலே, இவ்வோவியக்கண்காட்சி அமைந்திருக்கின்றது. பரீட்சார்த்தமாகஇம் முயற்சியை ஆரம்பித்தபோதும் இதுஒருமுன்னோடி முயற்சியாக அமைந்து விட்டது. கலை உணர்ச்சிகள் அருகாது பாதுகாப்பதற்கு, இது போன்ற கலை அரங்கேற்றங்கள் கைகொடுக்கும்".

இ. சுந்தரலிங்கம்•
வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்.

"மரபுரீதியான சிந்தனைகள் மட்டுமன்றிச் சமகாலச் சம்பவங்களும் இக்கலைஞர்களின் கைவண்ணங்களாக மலர்ந்துள்ளன. எமது ஓவியக் கலைக்குப் புத்துயிரூட்ட ஒரு புதிய பரம்பரை உருவாகிவிட்டது என்பதில் உள்ளம் பூரிக்கிறது.

—நா. சுப்பிரமணியம்,
யாழ். பல்கலைக் கழகம்.

"ஓவிய அரங்கேற்றம் நம்பிக்கையளிக்கின்றது. தங்கள் முயற்சிகள் தங்கள் வாழ்க்கைச் சூழலின் அவலங்களை, கோரங்களை சரிவர உணர்த்தவும் உபயோகிக்கப்படும் என்ற

தொகுப்பு:
'சேரன்'

வகையில் சேவற்சண்டையின் கலையம்சம் கவர்கிறது. அதேபோல் தேசச்சண்டையின் பகுதிகள் சமபங்கு பெறுமா?"

நாளையொரு புதுஉலகை
சமைக்கின்ற பெரும் பணிக்காக
தூரிகையைத் தூக்கிப்பிடி [யுங்கள்]
வாழ்த்துக்கள் வளர்க வென்று

—சூரியன்

பாடசாலைச் சித்திரக் கண்காட்சிகளை மட்டும் பார்த்து ஓவியம் வளராதா என்று ஏங்கிய எமக்கு ஏக்கம் தீர்க்கும் புதிய அனுபவமாக இந்த ஓவியக் கண்காட்சி அமைந்தது. பெண்கலைஞர்கள் மூவரும் வளரவாழ்த்துவதோடு, குடத்துள் விளக்காக கலை இருக்கக் கூடாதென்ற பெருநோக்குடன் கண்காட்சியை ஏற்பாடு செய்தோரைப் பாராட்டுகிறேம்.

பி. நடராசன்,
மயிலங்கூடலூர்

"ஓவியம் பற்றிய பிரக்ஞை யாழ்ப்பாணத்தவரிடையே அதிகம் கிடையாது என்ற குற்றச் சாட்டைத் துடைக்கும் வகையில், இது ஒரு முயற்சி. வயதில் இளையவர்களாக இருந்தபோதிலும் ஓவியங்களில் துணிவும், தன்னம்பிக்கையும் தெரிகிறது. பெண்களுடைய ஆக்கத்திறன்கள் அங்கீகரிக்கப்படாத எமது சமூகத்திற்கு நடனத்தையும், இசையையும் தவிர ஏனையதுறைகளில்பெண்களை எண்ணியும் பாராத எமது சமூகத்திற்கு இக்கண்காட்சி ஒரு சவாலாகும். ஓவியங்களை வரைந்த பெண்கள் சமகால நிகழ்ச்சிகளையும் ஓவியங்களாக்கியமை வரவேற்கத் தக்கது. பெண்கள் என்றவகையிலும் அவர்கள் தம்மை ஓவியத்தில் வெளிப்படுத்தவேண்டும்."

மௌ. சித்திரலேகா,
யாழ். பல்கலைக் கழகம்,

"இந்த ஓவியக் கண்காட்சி மாணவர்களாகிய எங்களது உணர்வுகளைத் தூண்டத்தக்கனவாக அதாவது கூண்டுக்கிளிகளாக அடங்கியிருந்த எமது உணர்வுகளைத்தட்டியெழுப்பி நாட்டு நிலைமைபற்றி புதியதோர் பாதையில் சிந்திக்க வைத்ததற்கு . நிச்சயம் உங்களைப் பாராட்டவேண்டும்."

சுசரிதா, தமயந்தி.

"'உடும்பன்குளம்'' சித்தரிப்பு உணர்வு நரம்புகளை மீட்டு சென்றது. அதேபோன்றே 'அக்கினிக்குஞ்சு' சித்தரிப்பும் "....நம்முள்ளே மறைந்திருக்கும் திறமைகளை நாம் யாருக்கும் சளைத்தவர்களில்லை என்பதை விளக்க ஓவியத்தாலும் போராடலாம் உணர்வை வெளிப்படுத்தலாம் என்பதை உணர்வித்தமைக்கு பாராட்டுகளும் நன்றியும்."

—சிவவதனி நிலாந்தி

பிரமிக்க வைக்கும் படைப்புகளைக் காணக்கூடியதாகவுள்ளது. அழிவு, அவலம் நிறைந்த இந்தச் சூழலில் எமது கலை இலக்கிய வளர்ச்சிதொடர்ந்து நடைபெற இப்படியான கண்காட்சிகள் நடைபெறவேண்டும்.
எனது வாழ்த்துக்கள்.

வைத்தியக் கலாநிதி,
க. சுகுமார்,
உரும்பராய்.

"பொதுவாக எல்லா ஓவியங்களும் சிறப்புடையனவாக அமைந்தபோதிலும் ஒரு சில ஓவியங்கள் உண்மையிலேயே மனதை நெகிழவைக்க்கூடியனவாகஅமைந்துள்ளன. குறிப்பாகக் கூறுவதானால்இன்றைய காலகட்டத்தோடு அமைந்த வேதனைக்குரிய சமகால வரலாறு சம்பந்தமானவை மனதை மிகவும் தொடக்கூடியனவாக உள்ளன"

திருமதி வி: தர்மானந்தன்'
கன்னியர் மடம், ம. வி.,
யாழ்ப்பாணம்.

ஓவியங்கள் சிறந்ததாக இருப்பினும் சில கலை ஓவியங்களில் வர்ணங்கள் கடுமையாக உள்ளன. பிரதிமைகளுள்

(9ம் பக்கம் பார்க்க)

## சமாதானத்துக்காக ஒரு மரம்!

சமாதானத்துக்காக
ஒரு மரம் நடுங்கள்-
ஐ. நா. சொல்கிறது!
வல்லரசுகளுக்கு - அந்தப்
பொல்லாத அரசுகளுக்குச்
சொல்லிச் சொல்லி
அலுத்துக் களைத்துப்போய்-
ஐ. நா. சொல்கிறது-
"சமாதானத்துக்காக
ஒரு மரம் நடுங்கள்!"
எவ்வளவு சொல்லியும்
கேட்காத அந்த நாடுகளை
"உணர்ச்சியற்ற மரக்கட்டைகளோ
நீங்கள் "என்பது போலவோ-
அல்லது-
அறிவற்ற மரங்கள்கூட
அமைதியாக இருந்து
எவ்வளவு பயன் தருகின்றன
என்று காட்டுவது போலவோ-
அல்லது-
இந்தச் சமாதான மரங்களைக்
காணும் போதாவது
சமாதானத்தின் அவசியத்தை
அவர்கள் உணரட்டும் என்பதற்காகவோ
என்னவோ-
ஐ. நா. சொல்கிறது-
"சமாதானத்திற்காக
ஒரு மரம் நடுங்கள்!"
எது எப்படியானலும்-
நாமும் ஒரு-
மரத்தை நட்டு வளர்ப்போம்-
வல்லரசுகளைப் போல் ஏமாற்ருமல்
நிச்சயம் அவை-
பயன் தந்தே தீரும்!.

நாயன்மார்கட்டு
ப. மகேந்திரதாசன்.

சிதம்பரம்

# நாவலர் பாடசாலையில் சித்தாந்த பெருமன்ற விழா

சென்னை மயிலாப்பூர் சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் முத்து விழா (80 ஆண்டு நிறைவு விழா) சிதம்பரம் மேலரத வீதியில் உள்ள தவத்திரு ஆறுமுகநாவலர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. சென்ற மாதம் 10 ம் 11 ம் திகதிகளில் நடைபெற்ற இவ்விழா நிகழ்ச்சிகள் சைவர் மாநாடு, சைவ மங்கையர் மாநாடு, சைவ இளைஞர் மாநாடு என மூன்று பிரிவாக நடைபெற்றது.

இவ்விழா நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கையில் தருமை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினர்.

சுவாமிகள் தமது ஆசியுரையில் நாவலர் பெருமான் தமிழ் நாட்டில் சைவத்தையும் தமிழையும் வளர்க்க ஆற்றிய பணிகளை விரிவாகக் குறிப்பிட்டதோடு சிவதீட்சையின் அவசியத்தையும் திரு நீற்றின் பெருமையினையும் நாவலர் வற்புறுத்தியமையினைக் கூறிச் சைவ நிறுவனங்கள் ஆதீனங்கள் என்பன வியாபார நோக்கின்றித்தூய விபூதியைத் தயாரித்துச் சைவமக்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்னும் யோசனையையும் வழங்கினர்.

அண்ணமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் திரு. சை. வே. சிட்டிபாபுதொடக்கவுரைநிகழ்த்தும் போது; சைவ சித்தாந்தத்தில் [illegible] வெளிநாட்டவர் நன்கு நன்கு ஆராய்ந்து வருகின்றனர். என்பதையும், இன்றைய இளைஞர்களிடையே சைவ சித்தாந்தத்தைப்பரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதையும் குறிப்பிட்டார்.

சைவர் மாநாட்டுக்குத் தலைமை வகித்த சைவ சித்தாந்தப்பேராசிரியர் மகா வித்துவான் திரு. சி. அருணை வடிவேல் முதலியார்; "இக்காலத்தில் சித்தாந்த சைவமாக விளங்கும் நம் சைவ சமயம் தொடக்கத்தில் 'மரபு சைவம்' என்றும் பின் 'ஆகம சைவம்' என்றும் பின் 'திருமுறைச்சைவம்' ஆகவும் விளங்கியது என்று குறிப்பிட்டதோடு தமிழ் மக்களுக்கு உரிமையான சமயம் சைவ சமயமே என்பதை அகழ்வாராய்ச்சிகளும் வலியுறுத்துகின்றன" என்ருர்.

2 ம் நாள் நடைபெற்ற நிகழ்ச்சிகள் திருமதி ம. புனிதம் (இலங்கை) பாடிய பக்திப்பாடல்களுடன் ஆரம்பமாகியது. மங்கையர் மாநாட்டுக்கு பேராசிரியர் திருமதி ந. சரோஜனிதேவி எம். ஏ. தலைமை தாங்கினர். சைவ மங்கையர் மாநாட்டில் திருமதி பழநியம்மாள், தவத்திரு ஓம் பவதாரிணி அன்னையார், டாக்டர் திருமதி சரஸ்வதி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

தவக்கோலம் பூண்ட இளைஞரான தவத்திரு மௌன சுந்தரமூர்த்தி சுவாமிகள் தலைமையில் சைவ இளைஞர் மாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டில் டாக்டர் எஸ். என் சுந்தரம், திரு, கு. வைத்தியநாதன், திருமதி பொன்னம்மா, திரு. மு. சிதம்பரநாதன் ஆகியோர் உரையாற்றினர்.


சைவ பெருமக்களின் தலைமைத் தலமான தில்லையில் ஆறுமுகநாவலர் 1864 ல் ஸ்தாபித்த பாடசாலையில் நடைபெற்ற சைவ சித்தாந்தப்பெருமன்ற முத்து விழா ஈழத்திற்கும் தமிழகத்திற்கும் இருந்து வரும் சமய கலாசாரத் தொடர்புகளை நினைவுபடுத்துவதாயமைந்தது எனப்பலரும் பாராட்டினர்.

விழா ஆரம்ப தினமான மே மாதம் 10 திகதி காலை 7 மணிக்கு சிதம்பரம் நடராஜர் கோவிலில் வழிபாடுகள் நடைபெற்றபின் யானை மீது திருமுறை ஊர்வலம் நிகழ்ந்தமையும்; இலங்கையிலிருந்து சென்ற திரு மு. கணபதிப்பிள்ளை, திரு ஐ. தி. சம்பந்தன், திருமதி ம. புனிதம் ஆகியோர் கலந்து கொண்டமையும்; சிவதீட்சை பெற விரும்பியவர்களுக்கு சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்களால் சிவகங்கைக் கரையில் சிவதீட்சைக்கு ஒழுங்கு செய்திருந்தமையும் விழாவில் முத்து விழா மலர், சைவ சமயக்கையேடு ஆகிய மலர்கள் வெளியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகும். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உறவுகள் விரிசலடைந்து அழிவின் விளிம்பில் நிற்கும் உலகம்!

திக்கவயல் தர்மகுலசிங்கம்



''நாம் யார்க்கும் குடியல்லோம்'' எனப் பண்டைத் தமிழர் தம் வாழ்க்கையை அமைத்தனர்.

அந்த இறுமாப்பு சோஷலிஸப் பக்கத்தில் எழுதப்பட வேண்டியது,

ஆயினும் இன்றைய மானிடம் ''நாம் நமக்காகவே.' என வாழப்பழகியதால்

இடர்கள் மலிந்தன. போர்கள் பல வந்தன; போயின.

உலகப்போர்கள் நடந்தன, இலட்சோப லட்சம் மக்கள் மடிந்தனர். இன்று நடப்பது என்ன? மூன்றும் உலக யுத்தத்தை நோக்கி உலகம் நடை பயில்கிறது. போர்க்களத்தில் அழிந்துவிட்ட மனித உயிர்களின் எண்ணிக்கை புள்ளி விபரத்தில் மாத்திரம் உண்டு. அழிக்கப்பட்ட ஆயுதத்தளபாடங்கள் மறுபிறவி எடுத்து விட்டன. உலகில் இன்று 45 இலட்சம் மக்கள் பட்டினியால் இறந்துவிடுகின்றனர். ஆயினும் ஒரு வருடம் தரிசாக விடப்படும் நிலம் 45 இலட்சம் ஹெக்டர் பரப்பளவு ஆகும். அது மாத்திரம் அன்றி பல லட்சம் டன்கள் மா நடுக்கடலில் கொட்டப்படுகின்றன. நல்ல விலை வீழ்ந்து போகும் என்பதால்தான் இவ்வாறான ஒரு நாடகம்! உலக மாந்தர் பட்டின் பற்றி அவர்கட்கு அக்கறை கிடையாது.

★

மானிடர்கள், உலகம் தோறும் தம் குடும்பத்தை வளர்ககப் பொருள் சேர்த்தனர்.

ஏவல்வேலைகளைச் செய்ய அடிமைகளைச் சேர்த்தனர்.

அறுசுவை உண்டி வேண்டி அலங்கார இல்லாளை அரவணைத்தனர்.

மூன்று நேர உண்டியில் ஆறு சுவைகளைச் சேர்த்தனர்.

பிற்கால வாழ்வு வேண்டிப் பிள்ளைகளை ஒன்றன்பின் ஒன்றாகச் சேர்த்தனர். சும்மா இருந்து சாப்பிட வட்டியைச் சேர்த்தனர்.

நோயே ஓடு எனத் தம் வயிற்றில் மருந்துகளைச் சேர்த்தனர்.

தம் எதிரிகளை விரட்டக் கோபத்தைச் சேர்த்தனர். அதற்குப் பக்கபலமாகத் தம் நாட்டில் வல்லரசுகளை அரவணைத்தனர். தமக்குச் சாதகமான இடத்தில் புன்னகையைச் சேர்த்தனர். ஆனால் வாழ்வு என்ற வைகறைப் பொழுது விடிவதற்கும், தம் ஆயுளை அதிகரிக்கவும் அன்பைச் சேர்க்க மறந்தனர். அந்தமறதி ஒன்றே இன்று உலகினை அழிக்கும் நிலைக்குத் தள்ளியது. சீற்றமே என்றும் நேற்றமே என்றும் பிளவு!

வல்லரசு என்றும் மூன்றும் உலகநாடு என்றும் பிளவு.

கறுப்பன் என்றும் வெள்ளையன் என்றும் பிளவு. ஒரு நாட்டிலே பல்வேறு மாநிலப் பிளவுகள். இந்த அன்பிலாப் பிளவுகள் ஒருநாள் அகிலத்தை வேரறுக்கும்.

★

மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள உறவு யானைக்கும் பாகனுக்கும் இடையே உள்ள உறவு போன்று விரிசல் அடைந்து உள்ளது. நம்பிக்கையற்ற இந்த உறவின்மீதுதான் உறவுகள் கட்டி வளர்க்கப்பட்டுள்ளன. பாகிஸ்தானும் இந்தியாவும் அண்டை நாடுகள்' அணிசேரா மகாநாட்டில் முகம் கொடுத்துப் பேசுகின்றன. அணிசேரா நாட்டு நண்பனே, எனது அணு உலையை நீ காப்பாயாக என்கின்றது பாகிஸ்தான். ஆமாம் என்கிறது இந்திய அரசு. ஆனால் இந்த அணுஉலையைப்பெற உதவியது பயங்கரவாத அமெரிக்கா.

★

''ஆயினும் நம்பிக்கையற்ற அடித்தளத்தில் இரண்டு நாடுகளும் கைகோர்க்கின்றன.

★

**'நான்' எனும் ஆணவம்**

அமெரிக்க ஜனாதிபதி பதவி ஏற்றபோது உலகம் நடுங்க ஆரம்பித்துவிட்டது. பிட்டுக்கு மண்சுமந்த பெருமானார் அடி வாங்கியபோது எல்லா ஜீவராசிகளிலும் பட்டது. றீகன் பதவியேற்றபோது 'நான்' என்ற ஆணவத்தின் நிழல் உலக மாந்தர்களில் விழ ஆரம்பித்துவிட்டது. நான் என்பது முதலாளித்துவம் நாம் என்பது சோஷலிஸம் என்று 'மகுடியார்' ஒருமுறை பதில் இறுத்தார். 'நான்' என்று எழுதவேண்டிவரும் என்பதால் எனது சுயசரிதையை நான் எழுத விரும்பவில்லை என்றார் கலாயோகி. ஆனால் றீகன் தனது பதவியேற்பு வைபவ உரையைப் பின்வருமாறு தொடங்கினர்.

''1981-ம் ஆண்டு நான் பதவி ஏற்றபோது நான் கண்ட நிகழ்ச்சி என்னை அதிர்ச்சி கொள்ளவைத்தது. உதிரிப்பாகங்களும், பயிற்சி பெறாத வீரர்களும், பறக்காத விமானங்களுமே நான் கண்டவை'' முன்னைய அரசு பற்றித் தமது பதவியேற்பு வைபவத்தின்போது றீகன் குறிப்பிட்ட அந்த 'நான்' அவரது ஆணவத்தைக் குறிக்கிறதா?

நட்சத்திரப் போர் (Star war) என்பது ஒரு ஹொலிவூட் படமாகும். அந்தப்படத்தில் கற்பனையாக அமைந்த யுத்தக் காட்சிகளை நிதர்சனமாகக் காட்ட றீகன் முனைகின்றார்.

அணுவிலும் அணுவாக வெடித்துச் சிதறும் குண்டுகள், லேசர் ஒளிக்கதிர்களை விசிறி எறிந்து நாசம் விளைக்கும் ஆயுதம் (Laser beam), நுண்துகள் அலைகுண்டு (Microwave hardware) ஏவுகணைகளைத் தகர்க்கும் யுக்தி இவை யாவும் அப்படத்தில் கற்பனையாக அன்றுகாட்டப்பட்டன இவைகள் யாவும் இன்று கோடிக் கணக்கான டொலர்கள் செலவுசெய்து தயாரிக்கப்படுகின்றன. றீகன் இதற்கு ஒப்புக்கொண்டு அதிக நாட்கள்; சிலவருடங்கள்!

நியூட்ரன் குண்டுகள் வேறு.

கட்டிடங்கள் இருக்க மனித உயிர்களைப் பறிக்கும் நியூட்ரன் குண்டுகளை ஊக்குவிக்க அவரே ஆணையிட்டார்.

அணுகுண்டால் பல லட்ச மனித உயிர்கள் பலியாகி— மீந்திருந்தோர் ''தண்ணீர், தண்ணீர்'' என முழங்கால்களால் ஊர்ந்துசென்றனர். ஒரு ஆகஸ்ட் 6-ல்.

அந்த ஆகஸ்ட் 6 தான் ஹிரோஷிமாவில் அமெரிக்கா அணுகுண்டு போட்ட அராஜக நாள்.

அன்று அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ட்ரூமன் 'வெற்றி வெற்றி வெற்றி' என ஆர்ப்பரித்து மது அருந்திக் களித்த நாள்.

அந்த ஆகஸ்ட் மாதந்தான் நியூட்ரன் குண்டு தயாரிக்கும் உன்னத நாளாக றீகன் அங்கீகரித்தார்.

இப்போது இருக்கும் அமெரிக்கக் குண்டுகள் இப்போதிருக்கும் உலகம் போன்ற 100 மடங்கு உலகினை அழிக்கும் வல்லமை வாய்ந்தது. இதற்கு மேலும் குண்டுகள் எதற்கோ?

★

**ஒரு நிமிடம் உலகைக் காக்க**

ஒவ்வொரு நிமிட நேரத்திலும் உலகில் 30 பிள்ளைகள் பசியால் வாடி இறந்துவிடுகின்றனர். அந்த ஒரு நிமிட நேரத்தில் உலகைப்பாதுகாக்க சுமார் 30 லட்சம் டொலர்கள் செலவாகின்றன. இலங்கை நாணயப்படி 60 கோடி ரூபாவாகும். ஒரு மனிதனின் பாதுகாப்பிற்காக அமெரிக்கா ஒரு வருடம் செலவிடும் தொகை 855 டொலர்! கிட்டத்தட்ட இலங்கை ரூபாவில் இருபதாயிரம். எமது நாட்டில் வியர்வையும் இரத்தமும் சிந்தி ஒரு வருடம் ஒரு மனிதனல் அப்பணத்தைச் சில சமயம் உழைக்கமுடியாது.

உலகம் புவி அச்சில் சுழல்வதாக நம்புகின்றோம். மனிதனின் விஞ்ஞான வளர்ச்சியால் அது நம்பிக்கையற்ற அச்சில் சுழல்கின்றது. ஆகையால் இறைவனே வல்லரசுகளிடமிருந்து உமது பிரசைகளாகிய எம்மைக் காப்பாற்றும்!

★

உலகில் இன்று 32 நாடுகளில் அமெரிக்காவுக்கு இராணுவத் தளங்கள் இருக்கின்றன. இந்த 32 நாடுகளிலும் 1,500 இராணுவத்தளங்கள் இயங்குகின்றன. அமெரிக்காவுக்கு வெளியே இத்தளங்களில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் அணு ஆயுத யூனிட் 12,000 ஆகும். ஆசிய நாடு

(8-ம் பக்கம் பார்க்க)

## அற்புதம் சமைப்போம்

தேடினர் செல்வம் சில்லோர்
குவித்தனர் சுக போகங்கள்
நாடினர் ஏழை வாழ்வை
நலித்தனர் காண நல்லோர்
கூடினர் பொதுமைக் கொடியின்
கொள்கையில் உறுதி கண்டார்
சாடினர் இல்லைப் பேதம்
சரிநிகர் ஜனங்கள் என்போம்

தப்பெனக் காணும் கோலைத்
தகர்த்துயர் நீதி காக்கும்
ஒப்பிலா வழியில் போந்து
ஓங்கிடும் பண்பு கொள்வோம்
குப்பையை நாடும் பன்றிக்
கூட்டமாய் அலையும் தீயோர்
தொப்பையின் உணர்வைத் தள்ளித்
தூய்மையாம் அறங்கள் வெல்வோம்.

கற்பது இரு சாரார்க்கும்
காப்பு நற்கல்வித் தாயின்
பொற்பதம் தொழுவோர் துணையாய்
பொருந்திட மகிழ்வோம் கூடி
அற்புதம் சமைப்போம் ஞான்றும்
அகிலத்தை வெல்வோம் அன்பால்
நற்திறன் வினையே நாட்டின்
நலன்விளை மேகம் காண்போம்

— நெடுந்தீவு லக்ஸ்மன்

## பண்டிதமணி நினைவுகள்

நான் திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றியபோது பண்டிதமணி ஐயா அவர்களின் வீட்டு வாயிலால் ஒவ்வொருநாளும் செல்லும் பேறு கிடைத்தது. பண்டிதமணி அவர்கள் சாய்வு நாற்காலியில் சாய்ந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கும். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவரைச் சென்று பார்த்துச் சில வார்த்தைகள் பேசிவருவது வழக்கம். முத்துத்தம்பியில் படிப்பிக்கும் 'சர்மா' அல்லவா என்று ஞாபகப்படுத்திக் கொண்டு பேசுவார்கள்.

பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் அவர்களின் மணிவிழாவுக்கு கி. வா. ஜ. இலங்கை வந்திருந்தபோது பண்டிதமணி அவர்களைப் பற்றி விசாரித்ததோடல்லாமல் அவரைப் பார்க்கவும் புறப்பட்டார்கள். கி. வா. ஜ. யாழ்ப்பாணம் வரும் போதெல்லாம் பண்டிதமணியவர்களைச் சந்திக்காமல் செல்வதில்லை. நீர்வேலி பிரம்மஸ்ரீ இராசேந்திரக்குருக்கள், பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் கி. வா. ஜ. ஆகியோரோடு சென்று பண்டிதமணியவர்களைச் சந்தித்ததை என்றும் மறப்பதற்கில்லை.

பண்டிதமணி கி. வா. ஜ. அவர்களை வரவேற்பதற்கு ஆயத்தமாக இருந்தார்கள். சுற்றிலும் சந்தனக் குச்சின் நறுமணம் கமழ்ந்துகொண்டிருந்தது. கி. வா. ஜ அவர்கள் பண்டிதமணியின் சாய்வு நாற்காலிக்கருகில் சென்றதும் பண்டிதமணி அவர்கள் 'ஐயா வாருங்கள்' என்று கைகளை உயர்த்திக்கொண்டு எழமுயன்றார்கள். கி வா. ஜ. அவரின் கைகளைப் பற்றிக்கொண்டு எழவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்கள். முழங்காலை நிமிர்த்தி எழுந்து நடமாட முடியவில்லை என்று பண்டிதமணியவர்கள் தனது சுகவீனம் பற்றி ச்சொன்னார். கைகள் பற்றிய கைகள் பற்றிய படியே இருக்க இருவரும் ஒருவரை ஒருவர் சிறிதுநேரம் பார்த்துக் கொண்டிருந்தனர். ''கற்றாரைக் கற்றாரே காமுறுவர்'' என்ற சொற்றொடர் எனக்கு நினைவு வந்தது. பின்னர் பண்டிதமணி அவர்கள், வந்திருந்த ஒவ்வொருவரோடும் அளவளாவி உபசரித்தார்கள். விடைபெற்றுக்கொண்டு அனைவரும் மணிவிழாவுக்குச் சென்றோம். கி வா. ஜ.-பண்டிதமணி சந்திப்பு அதுவே கடைசியாக இருக்குமென்று நாம் நினைத்திருக்கவில்லை!

பண்டிதமணி அவர்கள் உலா வந்த வீதி, பண்டிதமணி வீதி என மாற்றியமைப்பது பற்றி பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களும், மற்றும் அறிஞரும் குறிப்பிட்டது சாலவும் பொருத்தமானதாகும். கலாசாலை வீதி, இப்போது அங்கு கலாசாலை இல்லாததாலும் [கலாசாலை முத்துத்தம்பி ம. வி. யாக மாறியுள்ளது], பண்டிதமணி அவர்களின் நினைவுகளைச் சுமந்து நிற்க வேண்டுமென்பதாலும் ''பண்டிதமணி வீதி'' என மாற்றப்படவேண்டியதன் முக்கியத்துவத்தைத் திருநெல்வேலி மக்கள் உணர்ந்து ஆவன செய்யவேண்டும்.

பண்டிதமணி அவர்கள் வாழ்ந்த வீட்டில், அவர் பயன்படுத்திய பொருட்கள், நூல்கள், அவர் எழுதிய நூல்கள். கையெழுத்துப் பிரதிகள், அவர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள் பற்றிய விபரங்கள், புகைப்படங்கள், வாழ்க்கை நிகழ்ச்சிகள் போன்றவற்றைப் பாதுகாப்பாகப் பார்வைக்கு வைக்கவேண்டும். பண்டிதமணி அவர்கள்பால் பக்தி, அன்புகொண்டவர்கள் பார்த்துச்செல்ல வழிவகுக்கவேண்டும். அவரது தத்துவங்களையும், எழுத்துக்களையும் ஆராய விரும்புவோர்க்கும் இது பயன்படுவதாக அமையும்.

பண்டிதமணியின் ஆளுமையும் அவர் எழுதிய எழுத்துக்களும், அவர் ஆற்றிய சொற்பொழிவுகளும் என்றும் மறக்கப்படுபவையல்ல!

இர. சந்திரசேகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் நவீனம்

# இருள் இரவில் அல்ல

✶ இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

**12**

தனது நைந்துபோன வாழ்க்கையை எண்ணி மனம் நொந்துகொண்டிருந்த கந்தையருக்குத் தன் எதிரே தங்கலட்சுமி வந்து நிற்பது ஆச்சரியத்தைக் கொடுத்தது.

''என்ன பிள்ளை என்ன விசயம்'' என்று அவர் கேட்டார்.

''உங்களோடைதான் கொஞ்சம் கதைக்கவேணும். அரசடிக்கு ஒருக்கா வாறீங்களே'' என்று தங்கலட்சுமி கேட்டாள்.

''அதற்கென்ன பிள்ளை நீ நட நான் வாறன்'' என்று சொல்லிக்கொண்டு துவாயை உதறித் தோளில் போட்டவாறு தங்கலட்சுமியின் பின்னுல் நடந்தார்.

தங்கலட்சுமி விரைவாக நடந்து பொன்னம்பலத்தின் வீட்டிற்கு அப்பால் இருந்த அரசமரத்தடியைஅணுகினுள். கந்தையர் மிக மெதுவாக அரசடியை நோக்கி நடந்தார். சுருட்டுக் கொட்டிலில் இருந்தவர்கள் இருவரையும் விநோதமாகப் பார்த்தார்கள்.

அரசமரத்தடியில் இருந்த கல்லொன்றில் கந்தையர் அமர்ந்தார், அவர் எதிரே தங்கலட்சுமி நின்றுகொண்டிருந்தாள்.

''என்ன பிள்ளை என்ன விசயம்'' என்று கந்தையர் கேட்க எல்லாம் உவள் வசந்தமலர் பறறித்தான்'. என்று தங்கலட்சுமி கூறும்போதே தனது வெறுப்பினை அவள் காட்டிக் கொண்டாள்.

கந்தையருக்குத் தங்கலட்சுமி அப்படிக் கூறியது கொஞ்சம் அதிர்ச்சியைக் கொடுத்தது.

''அவளுக்கென்ன நல்ல பிள்ளைதானே'' கந்தையர் பதில் சொன்னுர்.

''ஓ நல்ல பிள்ளைதான்என்று நானும் நினைத்தேன்'' தங்கலட்சுமி முகத்தைச் சுழித்துக் கொண்டு சொன்னுள்.

''இஞ்சை பார் பிள்ளை என்ன விசியம் நீ சொல்லுறதைப் பார்த்தால் அவள் ஏதோ பிழை விட்டுட்டாற் போல கிடக்கு என்னவென்று சொல்லன்''

''அப்பு அவள் பிழை விட்டிடுவள் என்றுதான் எனக்கும் பயமாகக் கிடக்கு. அதாலதான் உங்களிட்டை வந்தனுன்.''

''ஏன் அப்பிடிச் சொல்லுருய் பிள்ளை.''

''பொன்னுத்துரை அடிக்கடி உவள் வசந்தமலரைப் பார்க்க வாருர். அவள் என்ன மாதிரி வளைந்து நெளிந்து அவரோடை கதைக்கிருள் தெரியுமே. வாத்தியார் சும்மா வந்துபோனுல் உவள் பல்லைக் காட்ட வேணுமோ''

''தங்கலட்சுமி நீ ஏதோ பிழையாக விளங்கிப்போட்டாய் போலக் கிடக்கு. பொன்னுத்துரை மாஸ்ரரைப்பற்றி உனக்குத் தெரியாது. அந்த மனிசன் எவ்வளவு நல்லவர். சும்மா கண்டபடி கதைக்கக் கூடாது. அந்தப்பெட்டை புருஷனுேடை இருக்கிற காலத்திலகூடக் கஷ்டப்பட்ட நேரத்துக்கு உதவி செய்யிறவர். அதுகள் அண்ணை தங்கச்சிமாதிரி. இதைப்போய்த் தவருய் நினைக்கிருய் போல கிடக்கு. பெட்டையும் பிழையான பெட்டை இல்லை.

''அப்பு பிழையானது என்று முகத்தில எழுதியே வைக்கிறது. அவளின்ரை நடவடிக்கைகளைப்பற்றி எனக்குத்தான் தெரியும். இளம் வயதில புருஷனைப் பறிகொடுத்தவை உப்பிடித்தான். யாரை வளைக்கலாம் என்று பார்க்கிறவை. அவளும் உப்பிடித்தான்வெளிக்கிட்டு இருக்கிருள்.''

பிள்ளை எனக்கு என்னவோ நீ சொல்லுறதில நம்பிக்கையில்லை நீதான் ஏதோ தவறுதலாக நினைக்கிருய்.''

தங்கலட்சுமிக்குக் கந்தையர் தனது பேச்சினை ஏற்றுக்கொள்கிருர் இல்லை என்றவுடன் ஆத்திரம்தான் வந்தது. இந்தக் கிழவனுக்கு என்ன சொன்னுலும் விளங்காதுபோல கிடக்கு என்று நினைத்துக்கொண்டாள்.

''சரி அப்பு உதை விடுங்கோ உங்கடை மோன் விடியற்காலமை கோயிலடிக்குப்போறவரே'' என்று தனது பேச்சினை வேறுபக்கம் திருப்பினுள் தங்கலட்சுமி.

''என்ன பொன்னம்பலமோ ஓ! இப்ப கொஞ்சநாளாக விடியற் காலமை எழும்பிக் கோயிலடிக்குப் போறவன். அவன் விசயமில்லாமல் ஒன்றும் செய்யமாட்டான்.'' ''உங்கடை மோன் கேயிலுக்கு வாறதைக்கண்டு என்னவோ உவள் வசந்தமலரும் அடிக்கடி விடிய கோயிலுக்குப் போருள். உங்கடை மகனுக்குக் கிட்டப் போய் நின்று கொஞ்சம்தன்னும் கூச்சம் இல்லாமற் கும்பிடுகின்ருள். மகனைக் குறை சொல்லவில்லை. ஆனுல் அவள் ஒருவேளை உங்கடை மகனின்ரை மூளையைக் குறுக்க இழுத்துப்போடுவளோ என்றுதான் பயமாகக் கிடக்கு'' என்று சொன்னுள் தங்கலட்சுமி.

கந்தையர் ஒன்றுமே பேசவில்லை நீண்ட பெருமூச்சொன்றை விட்டார். தங்கவட்சுமி சொன்னவைகள் அவருக்கு விதோதமானவையாகத் தென்பட்டன. அதனுல் தங்கலட்சுமி சொன்னவைகளை அவரால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை''. ''என்ன அப்பு யோசிக்கிறியள் நான்சொன்னவைகளை ஏற்றுக்கொள்ளாமல் மறுத்தீர்களே இப்பஎன்ன சொல்லப் போகின்றீர்கள்'' ''தங்கலட்சுமி எதையும்கண்டபடி கதையாதே. வித்தியாசமாய் நினைக்காதே அதுவும் ஒரு வாழ்விழந்த பொம்பிளையைப் பற்றி நீயும் பொம்பிளைப்பிள்ளைகளை வைச்சிருக்கிறனி கொஞ்சம் யோசிக்கவேணும். இந்தக்காலத்தில காதலோ கேட்கிறதும் கண்ணுல பார்க்கிறதும்கூட பொய். அதாலதான் சொல்லுறன் எதையும் வடிவாய் அறிஞ்சுபோட்டு முடிவெடுப்பம்'' என்று சொன்னுர் கந்தையர்.''

தங்கலட்சுமி மாமியின் முகத்தில் தீவிரமான மாற்றங்கள் ஏற்பட்டன. இதுவரை காலமும் அவளது பேச்சுக்களை கேட்கின்றவர்கள் எல்லாம் ஆமாம்போட்டு சுவாரஸ்யமாகக் கேட்பார்கள். அதனுல் தான் சொல்லுகின்ற கதைக்குக் கற்பனையையும் சேர்த்துப் பெரிதாகச் சொல்லுவாள்.

ஆனுல்

இப்போது தனது கருத்தைக் கந்தையர் ஏற்கமறுத்ததுமல்லாமல் நீ பெண்களை வைத்திருக்கிறனி இப்படிக் கண்டபடி கதைக்கக்கூடாது என்று சொன்னது சினத்தினை ஊட்டியது.

''அப்பு அவள் பெரிய ஆட்டக்காரி. அவளின்ரை ஆட்டம் பற்றி கெதியிலை நீங்கள் அறிவீர்கள் அப்ப நான் சொன்னதுகளை உணருவீர்கள்'' என்று சொல்லிவிட்டுக் கந்தையரின் பதிலுக்குக்கூட காத்திராமல் தங்கலட்சுமி போய்விட்டாள்.

வசந்தமலரை ஆட்டக்காரி என்று தங்கலட்சுமி சொன்னதைக் கேட்கக் கந்தையருக்குச் சிரிப்பாக இருந்தது. ஊரில் தங்கலட்சுமியைத்தான் ஆட்டக்காரி என்று முத்திரை குத்தி வைத்திருந்தார்கள்.

அவளின் பிள்ளைகளைக்கூட அதேமாதிரியாகத்தான் ஊராட்கள் வர்ணிப்பார்கள். அப்படிப்பட்ட தங்கலட்சுமி வசந்தமலரை ஆட்டக்காரி என்று சொன்னது கந்தையருக்குச் சிரிப்பை ஊட்டாமல் என்ன செய்யும்.

சுருட்டுக் கொட்டிலில் பெரும்பாலும் தங்கலட்சுமி வீட்டுக் கதைதான் நடக்கும். சோட்டிகளுடன் சாரதா, சுஜாத்தா கேற்றடியில் ஒற்றைக்காலில் தவம்புரிவது சுஜாத்தாவின் காதலன் வீட்டுக்கு வந்து வெகுநேரம் கழித்துப் போவது அவர்கள் அடிக்கடி படத்துக்கும் ரவுணுக்கும் போவது பற்றியெல்லாம் சுருட்டுக் கொட்டிலில் வெகுசுவையாகக் கதைப்பார்கள்.

பிரியாவுக்கு டியூசன்கொடுக்கும் டியூசன் மாஸ்டர் அதிக நேரம் அங்கு டியூசன் கொடுப்பதும், ஏன் அப்படி அந்த டியூசன் மாஸ்டர் அதிகநேரம் பொழுதைக் கழிக்கவேண்டும் என்றெல்லாம் வினுத்தொடுத்து தாங்களே அதற்கு பலவிதமான பதில்களை கூறி விமர்சிப்பார்கள்.

மௌத்தத்தில் தங்கலட்சுமி வீட்டு விடயங்கள் எந்த நேரமும் அரங்கத்திற்கு வந்து சேருகின்றன. சுருட்டுக்கொட்டிலில் நடைபெறும் கதைகளை அப்போது கந்தையர் நினைத்துக்கொண்டார்.

இப்படி எல்லோரும் கண்ட [illegible] விட்ட தங்கலட்சுமி மற்றவர்களது விடயங்களை, கூசாமல் கதைப்பதும் கந்தையருக்கு தெரிந்ததுதான்.

அதே மனப்பான்மையில் தான் வசந்தமலரைப் பற்றியும் தங்கலட்சுமி கதைக்கின்ருளா?

தங்கலட்சுமிக்கு இப்படி சந்தேகம் ஏற்பட்டுவிட்டபடியால் இது நிச்சயம் அரங்கத்துக்குவரும். பிறகு வசந்தமலரின்நிலை பெரும் சிக்கலாகிவிடும் எனவும் கந்தையர் நினைத்தார். தங்கலட்சுமி கட்டாயம் கோயிலடியில் இந்தக் கதையை பரவ விடுவாள். கோயிலடியில் வம்பு பேசுகின்றவர்கள் எல்லாரும் இதே கதைக்கு கண், காது, மூக்கு வைத்து மிகப்பெரிய உருவமாக்கி சந்தி சிரிக்க வைத்துவிடுவார்கள். அதனுல் வசந்தமலரின் எதிர்காலமே சுத்த சூனியமாகி பாழாகிவிடும் என்றும் கந்தையருக்கு அப்போது தோன்றியது.

தங்கலட்சுமியைப் பற்றி முன்னே கந்தையருக்கு தெரிந்தாலும் வசந்தமலரின் நிலைமையை உணர்ந்துதான் தங்கலட்சுமி வீட்டில் வசந்தமலரை தங்க வசதி செய்தார்.

ஆனுல் விளைவு இப்படியாக முடியும் என எள்ளளவுகூட நினைக்கவில்லை. எதிர்பாராது ஏற்பட்ட இந்த விளைவுகளை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இப்படியான அவதூறுகள் பெரிதாக மாறி வசந்தமலரை சின்னுபின்னப் படுத்தாமல் இருக்கவேண்டுமானுல் ஒரே ஒரு வழிதான் உள்ளது. அதுவும் சிக்கலான வழிதான். அதை வசந்தமலர் ஏற்பாளா? என்பதுதான் அப்போது கந்தையருக்கு தோன்றியது. அதுபற்றியே அவர் வெகு நேரமாக யோசித்தார்.

★ அன்று மத்தியானச் சாப்பாட்டை முடித்துக்கொண்ட பின்னர் சாரதாவும் சுஜாத்தாவும் பகல் நித்திரை கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். தங்கலட்சுமியும் அவருடைய சொந்தக்காரர் வீட்டுக்கு போய்விட்டார்.

பின் விருந்தையில் வசந்தமலர் மகன்சங்கரனை மடியில் படுக்கவைத்துவிட்டு விருந்தை சுவரோடு சாய்ந்துகொண்டிருந்தாள். அந்த சமயத்தில்.

'பிள்ளை பிள்ளை' என யாரோ கூப்பிட்டுக்கொண்டு பின் விருந்தைப்பக்கம் வந்தார்கள். அந்தக்குரலுக்கு பதில் கொடுக்காமலே மௌனமாகவே வசந்தமலர் இருந்தாள்.

வந்தவர் தங்கலட்சுமி மாமியின் நெருங்கிய சிநேகிதியும் கோயிலடி பேச்சுக்களில் முன்னணியில் இருப்பவருமான செல்லம்மாவாகும்.

செல்லம்மாவைக் கண்டதும் ''மாமி எங்கேயோ போட்டா'' என்று வசந்தமலர் சொன்னுள். ''எனக்கு தெரியும் அதாலதான் வந்தனுன். அதுசரி சாரதாவும் சுஜாத்தாவும் எங்கே'' எனக் கேட்டவாறு செல்லம்மா விருந்தையில் வசந்தமலருக்கு பக்கத்தில் வந்து அமர்ந்தாள். ''அவையள் நித்திரை எழுப்பி விடுகிறதோ''என வசந்தமலர் கேட்டாள்.

''வேண்டாம் இப்ப நான் உன்னேடைதான் கதைக்க வந்தனுன்''

''என்னேடையோ'' என்று வசந்தமலர் கேட்கும்போது அவளது விழிகளில் வியப்பு தோன்றியது.

''ஓம் பிள்ளை யாரும் வருவதற்கு முன்னர் உன்னேடை கதைக்கவேண்டும். அது சரி நீ உப்பிடியே இருந்து என்ன செய்யப்போகின்ருய்''

''ஏன்......''

''அதில்லை உன்னை எத்தினை நாளைக்குத்தான் தங்கலட்சுமி மாமி பார்ப்பள்''

''ஏன் அப்பிடிக் கேட்கிறியள்''

''இல்லை அவவும் வயது போனவ. இந்த வருஷமோ இல்லை அடுத்த வருஷமோ பெட்டையளும் கலியாணம் முடிச்சுப் போனுல் உனக்கு யார் பிறகு உதவிசெய்யப் போகின்ருர்கள்'' என்று செல்லம்மா கேட்டாள்.

''அதைப்பற்றி பிறகு யோசிப்பம் இப்ப என்ன பிரச்சனை''

''பிறகு யோசித்து என்ன பிரயோசனம். இப்ப அதைப் பற்றி ஏதாவது செய்துவைத்தால் தானே அந்த நேரத்தில் கஷ்டப்படாமல் இருக்கலாம்''

''அதுக்கு என்ன செய்யச் சொல்லுகின்றீர்கள்''

''அப்பிடி கேள்''

''அந்த நேரம் அவரின்ரை பேச்சைக் கேட்டிருந்தால் ஒரு பிரச்சனையும் வந்திருக்காது. என்ன மாதிரி நீ இருந்திருக்கலாம். ரவுணில வீடு. நல்ல வசதியான வாழ்க்கை. சந்தோஷமான சீவியம் அதையெல்லாம் விட்டுப்போட்டு இப்ப கஷ்டப்படுகின்றியே அவருடையசொற்படி..... ''என்று மேலும் செல்லம்மா சொல்லும் பேச்சை, வசந்தமலர் இடைமறித்தாள். ''யார் அவர்''என்று அவள் கேட்கும் போது வசந்தமலரின் குரலில் மாற்றம் ஏற்பட்டது.

''அவர்தான் சுருட்டுக் கொட்டில் முதலாளி பொன்னம்பலத்தார்'' என்று பதில் சொன்னுள் செல்லம்மா.

கொதிக்கும் எண்ணெயை உடலில் தெளித்துவிட்டது போன்ற உணர்வை வசந்தமலர் அப்போது அடைந்தாள். (வளரும்)

## ஆதித்தனரும் பேராசிரியரும்

''தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் சுப்பிரமணியம் ஒருதடவை தினத்தந்தி அதிபர் ஆதித்தனரிடம் வேலை கேட்டார்.

'இவ்வளவு படித்த நீங்கள் இங்கு வேலை கேட்டு வருவது எதற்காக? என்று ஆதித்தனுர் சுப்பிரமணியத்தை வினுவினுர்.

''ஐயா உங்கள் பத்திரிகையில் க், ச், ப் முதலான மெய் எழுத்துக்கள் போடப்படுவதில்லை. இதை உங்கள் பத்திரிகையில் போட்டு பத்திரிகையை நல்லாகச் செய்ய விரும்புகிறேன்'' என்ருர் சுப்பிரமணியம். உடனே ஆதித்தனுர் ''நான் பாமர மக்களுக்காகப் பத்திரிகை நடத்துகிறேன். க், ச், ப் போட்டுப் பத்திரிகை வெளிவந்தால் அதைப் பாமரமக்கள் படிக்கக் கஷ்டப்படுவார்கள். எனவே, இப்போது உங்கள் சேவை எங்களுக்குத் தேவையில்லை. இருக்கும் உதவியாசிரியர்கள் போதும் என்ருர்.

—ஸச்சி

## இந்த நிலையே தினமும் இங்கு

துப்பாக்கி யால் 'ஆமி' சுடுவதால், ஷெல்குண்டு
தப்பாமல் சென்றுமிகத் தாக்குவதால்—அப்பாவி
மக்கள்சிலர் சாகின்ருர்; மற்றவர்கள் காயமுற்றுத்
தொக்குவரு கின்ருர் துடித்து.

கத்திக் கதறிக் கடுங்காயம் பட்டவர்கள்
எத்தினமும் யாழ்ப்பாணுஸ் பத்திரியில்—தத்தளித்து
வந்துகுவி கின்ருர்கள், வாட்டிறப்படுக்கின்ருர்
இந்தநிலை யேதினமும் இங்கு.

பொம்மர் விமானத்தால் பேய்ஹெலிகொப்டரினுல்
அம்மா! தினம்மடிவோர் 'ஐயையோ!!—எம்மாலே
எண்ணவும் ஏலாதே ஏன்?இப் படிஇறைவா!
பண்ணவிட்டுப் பார்க்கின்ருய் பார்.

—கவியரசு, வெண்பாமணி

முருகசூரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சித்திரம்

# எங்கோ... ஏதோ... என்னவோ...

இன்றும் விடிந்தும், விடியாத அதிகாலையில் பாரிய வெடிச்சத்தத்துடன் தான் நான் கண்விழித்தேன். இப்போது கொஞ்சக்காலமாக இரவில் வெடிச்சத்தங்கள் தான் தாலாட்டித் துயில் கொள்ள வைக்கின்றன. அதிகாலையில் வெடிச்சத்தங்கள் தான் துயில் கலையவும் வைக்கின்றன.

திடீரென ஆகாயத்தில் ஏதோ இரைச்சல்! விறுந்தையில் நின்றபடி தலையைமட்டும் நீட்டி வானத்தைப் பார்த்தேன். பேரிரைச்சலுடன் இயந்திரக் கழுகு ஒன்று வட்டமடித்துச் செல்கிறது. அதைத் தொடர்ந்து குண்டு குண்டாக இட்டுத்தள்ளும் செட்டை அடிக்காத குருவிகள் இரண்டு தென்திசையில் இருந்து வடதிசையை நோக்கி விர்ரெனப் பறந்து சென்று மறைந்தன.

எங்கோ, ஏதோ, என்னவோ நடந்திருக்கவேண்டும்—

''என்னப்பா எட்டு மணியாகுது வேலைக்குப் போற எண்ணம் இல்லையோ? ''—குசினிக்குள் இருந்த குடும்பத் தலைவியின் குரல்.

சென்ற வாரம் இப்படியான தடங்கல்களால் நான்கு நாட்கள் தான் வேலை கிடைத்தன. நான் ஒருநாள் வேலைக்குப் போகாமல் விட்டால் அதன் தாக்கம் அவளுக்குத் தான் தெரியும். ஒரு புதுக் கவிதை ஒன்று ஞாபகத்துக்கு வந்தது.

'எங்கள் வீட்டின்
அடுப்பின் அகலத்தை
பானையிடம் கேட்பதை
விட
பூனையிடம் கேட்பதே
புத்திசாலித்தனம்''

இது இப்போது எங்கள் வீட்டு நிலவரத்துக்கும் ஒத்துப் போகிறது சரி, சரி வேலைக்கு நேரமாகிவிட்டது.

விபூதியை அள்ளி நெற்றி நிறைய இழுத்து முருகன் படத்தின் முன் விழிமூடி விரல் சேர்த்து வழமையான வாசகங்களை முணு முணுத்துவிட்டு ''முருகா'' என்ற மன நிறைவுடன் சேட்டை மாட்டி முற்றத்தில் கால்வைத்தேன்.

''பட...பட... பட... பட்!'' இதென்ன தொடர்ச்சியான வெடிச்சத்தங்கள்! திரும்பி ஓடிவந்து விறுந்தையில் ஏறி வீதியை நோட்டமிட்டேன்.

''என்னப்பா திரும்பி ஓடியாறியள்?'' என்னவளின் கேள்வி.

''இல்லை...உந்தப் பக்கமாக வெடிச்சத்தங்கள் கேட்குது அதுதான்.....''

''ஐயோ...கடவுளே! இந்தாளுக்குக் காதும் பூஞ்சணம் வத்திப்போச்சுது பக்கத்து வீட்டுப் பார்வதி அக்கா அம்மியிலை இஞ்சி நுணுக்கிறா இந்தாள் வெடிச்சத்தம் எண்டு திரும்பி ஓடி வருகுது!'' என்னவள் இப்படி ஏளனமாகக் கூறி அலுத்துக்கொண்டாள்.

மீண்டும் அந்த 'பட.. பட... பட்!' சத்தத்தை உன்னிப்பாகக் கேட்டேன் உண்மை தான்...அடுத்த வீட்டில் அம்மியும், குழவியும் மோதும் சத்தம் தான் என்னவோ தெரியவில்லை இப்போது கொஞ்சக் காலமாக எனது காதுகளும், கண்களும் என்னோடு உண்மையைக் கிரகித்து ஒத்துழைக்க மறுக்கின்றன,

நாடு சீராக இருக்கும்போது மாதம் முழுவதும் வேலை செய்தாலும் குடும்பத்தைக் கொண்டு இழுப்பது ஒரு இமாலய சாதனை. இப்போது மாதத்தில் அரைப்பகுதி நாட்களே வேலை கிடைப்பது அரிது அதுவும் இப்படியான தடங்கல்களால் இல்லாமல் போய்விடுகிறது.

குடும்பபாரம் தாங்காத காரணத்தால் தான் மனைவி. நான்கு குழந்தைகளோடு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டாள். இனிமேல் எங்கள் இரைப்பைகளையும் செய்து கொள்ளவேண்டியது தான்.

● குமார் தனபால்

மாதா மாதம் கைஎழுத்துப் போட்டுக் கைநிறையக் கரன்சி நோட்டுக்களை அடுக்கிக் கொண்டுவரும் அரச ஊழியனோ..தனியார்ஸ்தாபன லிகிதரோ அல்ல வேலைசெய்தால் தான் கூலி என்ற அடிப்படையில் வீடு வீடாக ஏறி இறங்கி வர்ணம் பூசும் சாதாரண வர்ணப் பூச்சாளன். அதுவும் இன்றைய நாட்டு நடப்பில் யார் தான் வீடுகளுக்கு வர்ணம் பூசி அழகுபார்ப்பார்கள்?

''என்ன.. யோசிச்சுக் கொண்டுநிக்கிறியள்?''

நேரம் எட்டரையாப் போச்சு. இண்டைக்காவது வேலைக்குப் போய்ப்பாருங்கோ வன் உங்களை நம்பித்தான் பார்வதி அக்காவிடம் பத்து ரூபா வாங்கி புட்டு அவிச்சு புள்ளையளைப் பள்ளிக்கு விட்டனான்''—மனைவி குடும்ப நிலபரத்தைச் சுட்டிக்காட்டி என்னைத்துரிதப்படுத்தினாள்.

நேரத்தை எட்டிப் பார்த்தேன். எங்கள் வீட்டுச்சுவரையல்ல. அவர்கள் வீட்டு ஜன்னல் ஊடாக தெளிவாகத் தெரியும். பக்கத்து வீட்டுச் சுவர் மணிக்கூண்டை அது எட்டு அரையைத் தாண்டிப் போய்க்கொண்டிருந்தது.

சரி சரி எங்கோ ஏதோ என்னவோ நடந்தால் என்ன போவோர் வருவோரை விசாரித்து விசாரித்து வேலைசெய்யும் இடத்திற்குப் போய்விட வேண்டும்.

மீண்டும் மனதைத் திடப்படுத்தியபடி படலையைத் தாண்டி வீதியில் கால் பதித்த வேளை......

சந்திப்பக்கமாக கனரக வாகனங்கள் நிரைகட்டி வருவது போன்ற உறுமல் ஒலிகள்! வரிந்து கட்டிக்கொண்டு விறு விறுவென இழைக்கக் களைக்க ஓடி விறுந்தையில் ஏறினேன்.

''என்ன பேந்தும் திரும்பித் திரும்பி ஓடி வாறியள்?''—சினத்துடன் வினவினாள்.

''இல்லை...... சந்திப்பக்கமாக இரைச்சலாக இருக்கு... இவங்கள் வாறுங்கள் போலை...''— என இழுத்தபடி மிரள மிரள வீதியை எட்டி எட்டிப் பார்த்தேன். மனைவியும் ஓடிப்போய் தெருப்பக்கத்து வேலியைப் பிய்த்துவிட்டு சலிப்புடன் புறு புறுத்தபடி வந்தாள்.

''நாலைஞ்சு குப்பை ஏத்திற மாநகர சபை ரைக்ரர்கள் வருகுது...... இந்தாள்...... சீச் சீச்சி..! இப்பிடிப் பயந்த மனிசனை நான் காணேல்லை...இப்ப அவங்களை வெளியிலைவர பொடியன்கள் விடுகிறேல்லை எண்டதும் தெரியாமல் குண்டு வெடிச்சாலும் குஞ்சு குருமன்கள் பள்ளிக்குப்போய் வருகுதுகள் இந்தாளை வேலைக்கு அனுப்ப ஏலாமல் கிடக்கு;

இந்த இடத்தில் என் மகனோ மகளோ இப்படி நடந்திருந்தால் அவளுக்கு வரும் ஆத்திரத்தில் அவர்களை இழுத்துப் போட்டு முதுகில் ஒறுட்டி தட்டி இருப்பாள் கணவன் என்ற ஸ்தானத்தில் நான் இருப்பதால் தப்பினேன்.

குண்டு வெடித்தால் என்ன ஷெல் விழுந்தால் என்ன அதற்கெல்லாம் கிளித்தட்டு மறித்து ஜனங்கள் வேலைக்குப் போய்வரப் பழக்கப்பட்டு விட்டார்கள். நான்தான் இந்த மண்ணில் உயிருடன் இருப்பதைப்போன்று பயந்து சாகிறேன். துணிந்தவனுக்கு ஒருமுறைதான் சாவு பயந்தவனுக்குப் பலமுறை சாவு என்பது என்வரையில் உண்மையாகிவிட்டது. என்னையே நான் திட்டித் தீர்த்தபடி நிமிர்ந்த நடையும் வானத்தைப் பார்க்கும் விழிகளுமாக துணிச்சலுடன் படலையடிக்கு விரைந்தேன்...—

அந்தக்கணம்!

''மகே அம்மே...... கொட்டியா எனவா!'' எனக் குரல் வைத்தபடி நாலைந்து பேர்கள் எங்கள் ஒழுங்கையால் ஓடி வேலியால் பாய......

''சூட்! சூட்!'' என்ற சத்தத்துடன் இரண்டு பொடியன்கள் கையில் ஏதோ இயந்திரத் துப்பாக்கி போல ஒரு பொருளுடன் அவர்களைத் துரத்திக்கொண்டு ஓட......

''என்ரை ஐயோ...!''— எனக்கத்தியபடி நான் வீட்டுக்குள் ஓடிவந்து கட்டிலுக்குக் கீழ் ஒழிக்க.

விஷயம் அறிந்த மனையாள் முற்றத்தில் நின்றபடி என்னைக் கீழ்க்கண்டவாறு திட்டித்தீர்த்தாள்.

''பள்ளிக்கும் போகாமல் சில தறுதலைகள் முந்திக் 'கள்ளன், பொலிஸ்' விளையாட்டு மாதிரி பலகையிலை துவக்குச் சரிக்கட்டி 'ஆமி பொடியள்' விளையாட்டு விளையாடுகிறுங்கள் இந்த மனிசன் அதைக் கண்டு பயந்து கட்டிலுக்கை

(8ம் பக்கம் பார்க்க)

## கருணாநிதியின் கவிதைகள்

டாக்டர் சுந்தரம் கலைஞர் மு. கருணாநிதியின் கவிதைகளில் மிகவும் நாட்டம் உள்ளவர். கவிஞர் சுரதா, கண்ணதாசன் ஆகியோரின் கவிதைகளைவிடக் கருணாநிதியின் கவிதைகளைத் தான் சுவைப்பதாக எழுதியுள்ளார்.

இது சம்பந்தமாகக் கவிதை நடையில் கவிஞரைப் பாராட்டி டாக்டர் சுந்தரம் கவிதை ஒன்று பாடியுள்ளார். இதுதான் அக்கவிதை:

தலையறுத்த வீரர்களைப் பாடுவதால்
தலையகற்றிப் பாடுகிறேன் நானும் அவர்
தொடை தட்டித் துரோகிகளை வீழ்த்தியதால்
தொடைதட்டும் என்பாட்டும் என்கவிதை
யாப்பின்றிப் போனாலும் போகட்டும்
நம்நாடு மொழிமானம் உணர்வு எல்லாம்
காப்பின்றிப்போதல் கூடாதென்னும் கொள்கைஒன்றால்
வாய்ப்பின்றிப் போனாலும் செய்யுள் கற்க.

தொகுப்பு: திக்கபக்தன்



# நாடோடிக் கதைகள்

தமிழில்: நீர்வை பொன்னையன்

## பதவி மோகம்

ஒரு கழுதை காட்டிற்குப் புல் மேயச் சென்றது.

பசியில் இரை தேடி அலைந்து திரிந்த ஒரு ஓநாய் கழுதையைக் கண்டது.

''விரைவில் எனது பசி தீர்ந்துவிடும். கடவுளுக்கு பெரும் நன்றி!''

தனக்குத் தானே ஓநாய் கூறிக் கொண்டது.

கழுதையும் ஓநாயைக் கண்டுவிட்டது. ஓநாயிடமிருந்து எப்படித் தப்பித்துக்கொள்வது என்று கழுதை சிந்தித்தது.

ஓநாய் கழுதைக்குக் கிட்டச் சென்றது.

''நண்பனே! நீ இங்கேயா இருக்கின்றாய்? நான் உனக்காக மூன்று நாட்களாக எல்லா இடமும் தேடிஅலைந்து கொண்டிருக்கின்றேன்''

கழுதை கூறியது.

ஓநாய்க்கு பேராச்சரியம்.

''எதற்காக என்னைத்தேடி அலைகின்றாய்?''

ஒன்றும் புரியாமல் ஓநாய் கேட்டது.

''அவர்கள் கிராம சபைக்கு தேர்தல் நடத்துகின்றார்கள். கிராமசபையின் தலைவர் யார் என்று அவர்களால் தீர்மானிக்கமுடியவில்லை. யாரோ ஒருவர் உம்மை தலைவராக்கினல் நல்லது என்றார். அதைக் கேட்டதும் அவர்கள் எல்லோருக்கும் பெரும் மகிழ்ச்சி. அந்தப் பதவியை ஏற்பதற்கு உம்மை உடனே கூட்டிவரும்படி அவர்கள் என்னை அனுப்பியிருக்கின்றார்கள் ''

கழுதை மூச்சுவிடாமல் கூறியது.

''என்னை தலைவராகப் பெறுவதற்கு நீங்கள் எவ்வளவு அதிஷ்டசாலிகளாக இருக்க வேண்டும்!''

ஓநாய் பெருமையுடன் கூறியது.

''ஆம், எனக்கும் பெரும் சந்தோஷம். சரி. நீர் எனது முதுகில் ஏறிக்கொள்ளும். நான் உம்மை கிராமத்திற்கு கொண்டு செல்கின்றேன்.''

ஓநாய் கழுதையின் முதுகில் ஏறிக்கொண்டது.

அவைகள் கிராமத்தை அடைந்ததும், கழுதை உரத்த குரலில் கத்தியது.

கிராமத்து மக்கள் ஓடிவந்தார்கள்.

கழுதையின் முதுகில் ஓநாய் இருப்பதைக் கண்ட அவர்கள் வியப்படைந்தார்கள்.

தடிகளாலும் கற்களாலும் கிராமத்து மக்கள் ஓநாயைத் தாக்கினார்கள்.

வேதனை தாங்க முடியாத ஓநாய் 'தப்பினேன் பிழைத்தேன்' என்று எண்ணிக் கொண்டு ஓட்டமெடுத்தது. அது வயல் பக்கமாக தலை தெறிக்க ஓடியது.

வயலில் ஒரு உழவன் வைக்கோல் போரைக் குவித்துக் கொண்டிருந்தான்.

ஓநாயைக் கண்டதும் அவன் வைக்கோல் போரின் ஒரு பக்கத்தில் மறைந்திருந்தான்,

தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கு ஓநாய் வைக்கோல் போரின் மறுபக்கத்தில் மறைந்திருந்தது.

''நான் ஏன் கிராமத்தின் தலைவராக வருவதற்கு விரும்பினேன்?''

ஓநாய் தன்னைத்தானே கேட்டுக்கொண்டது.

''எனது தந்தை ஒருபொழுதும் கிராமசபைத் தலைவராக இருந்ததில்லை. எனது பாட்டனும் அந்தப் பதவியில் இருக்கவில்லை. எனது முட்டாள்தனமான ஆசைக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும்''

வைக்கோல் போரின் மறுபுறத்தில் மறைந்திருந்த உழவன் வைக்கோல் வாரியை ஓங்கினான். அதனூடாக ஓடிய ஓநாயின் தலையில் வைக்கோல் வாரி விழுந்தது.

அதிர்ச்சியுடன் விழுந்த ஓநாய் தனது இறுதி மூச்சை விட்டது.

## சவால்

ஆற்றங்கரை ஓரமாக ஒரு நரி சென்றுகொண்டிருந்தது. அப்பொழுது அது ஒரு நண்டைக் கண்டது. நண்டு ஒரு கல்லில் தனது கொடுக்குகளைக் கூர்மைப்படுத்திக்கொண்டிருந்தது.

''நண்டே நீ என்ன செய்கின்றாய்? உனது கொடுக்குகளைத்தீட்டுகின்றாயா? நீஎன்ன புல்லுவெட்டுவதற்கு ஆயத்தம் செய்கின்றாயா?''

நரி கிண்டலாகக் கேட்டது.

''நீ உன் பற்களை உபயோகிப்பது போலவே நான் எனது கொடுக்குகளைப் பாவிக்கின்றேன். அதற்காகத்தான் நான் அவற்றைத் தீட்டுகின்றேன்''

நண்டு நிதானமாகக் கூறியது.

''மக்கள் நண்டுகளைப் பற்றிக் கதைக்கும்பொழுது ஏன் சிரிக்கின்றார்கள் என்று இப்பொழுதுதான் எனக்கு புரிகின்றது.''

நரி கூறியது.

''என்ன புரிகிறது?''

நண்டு விநயத்துடன் கேட்டது.

''நீங்கள் சிறிதுநீரை எடுத்து வந்து வாசற்படியில் தெளிப்பதற்கு ஏழு வருடங்கள் பிடிக்கும் என்று மக்கள் கூறுவார்கள் ஒருவருடைய கால்பாதங்களில் பற்கள் இருக்கும்பொழுது அவரால் எப்படி விரைவாக நடக்கமுடியும்? என்ன நான் சொல்வது சரிதானே?''

''ஒரு காலத்தில் அது சரியாக இருந்திருக்கக்கூடும். ஆனல் தற்பொழுது நிச்சயமாக அப்படியில்லை சரிஅப்படியென்றால் நானும் நீயும் பந்தயத்திற்கு ஓடிப்பார்ப்போமா? வேண்டுமென்றால் எனக்கு முன்னால் நீ ஒரு கவடு தூரம் முன்னுக்கு நிற்கலாம். அதோ, காட்டின் ஓரத்திலுள்ள அந்தக் காட்டரசமரம்வரை ஓடிப்பார்ப்போம்; வருகிறாயா?

நண்டு நரிக்குச் சவால் விட்டது.

''சரி நாங்கள் ஓடிப்பார்ப்போம்.''

நரி ஓட்டப்போட்டிக்கு உடன்பட்டது.

நண்டு நின்ற இடத்திலிருந்து ஒரு கவடு தூரம் முன்னுக்கு நின்றது. நண்டு தனது கொடுக்குகளால் நரியின்வாலை இறுகப்பற்றிப் பிடித்துக் கொண்டது. நரியின் வால்

(8 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருதாணி மலர்-2

இஸ்லாமிய தமிழ், மக்கள் மத்தியிலே கலை, இலக்கியத்தில் பேரெழுச்சி கொண்டு ஒரு இஸ்லாமியப் பெண்ணினால் வழிநடாத்தப்படும் ஒரு தமிழ் இதழ் மருதாணி.

மலரிலே மணம் பரப்பும் கட்டுரைகள் பல. அதில் பலஸ்தீனும் முஸ்லிம் உலகமும் என்ற தலைப்பிலே ஒரு கட்டுரை உண்டு. அதனை மௌலவி K. M. H. காலிதீன் எம். ஏ. அவர்கள் எழுதியிருக்கின்றார். கட்டுரை எம்மைச் சிந்திக்கவைத்தது.

''வெளியுலகிற்கு அமெரிக்காவும், ரஷ்யாவும் எதிர்ச் சக்திகளாகக் காட்டிக்கொண்டாலும் முஸ்லிம்களின் பலத்தைக் குறைப்பதில் இரண்டு வல்லரசுகளும் ஒன்றுபட்டுச் செயலாற்றுகின்றன'' இக்கட்டுரையில் புதுமைக் கருத்து இது முழு முஸ்லிம்களும் இந்தத் தொடர் கட்டுரையை வாசித்தல் வேண்டும்.

இன்று சிறுகதை உலகிலே புதுமை நடைபெறுகின்றது. அந்தப் புதுமைகட்கு இடம் கொடுக்கும் சிறுகதைகளில் ஒன்று யாழ் மகன் எழுதியுள்ள 'பாதை வகுத்த பின்னே' என்ற கதையாகும். ஜெயகாந்தனின் பழைய காலத்துச் 'சோற்றுச் சுமை' என்ற கதையை இக்கதை ஞாபகப் படுத்தினாலும் இடையிலே வந்த காதல் அந்தச் சாயலை விழுத்திவிட்டது,

பாட்டிலே வேட்டுக்களைத் தீர்த்துவிடும் கவிதைகளை மருதாணி தரத்தவறவில்லை. ஸ்ரீலங்கா தேசமே உனது அகிம்சைக் கற்பை எந்த இராணுவப் பிரிவு சூறையாடியது என்ற இடம் நம்மைச் சற்று நிற்கச் செய்தது. இந்தக் கவிதையை நிதானி தாஸன் எழுதியுள்ளார். மற்றும் இல்னு அஹமத், ஜௌசி அக்பர் ஆகியோரின் கவிதைகளும் எம்மைச் சிந்திக்க வைத்தன.

கடைசியாக மாணவர் மன்றத்தின் அல்லாமா இக்பால் பேசுகின்றார் என்ற இடம் எம்மை நிதானிக்க வைத்தது.

இன்று பௌத்தர்கள்-தமிழர்களிடையே போர்.

அராபியர்கட்கும்- இஸ்ரேலியருக்கும் போர்.

வெள்ளையரும் நீக்கிரோவும் அடிதடி.

இவர்களின் போர் எல்லாம் 3-ம் உலக யுத்தம் தொடங்கினால்?.........

உலகமே தரைமட்டமாகி விடும் என்று கட்டுரையாளர் மும்தாஜ் சுல்த்தான் முடிக்கின்றார்.

ஒரு புதுமையைப் படைக்க மருதாணி விழைகின்றது. இவர்கட்கு எமது பாராட்டுக்கள்.

—திக்கபக்தன்.

## எங்கோ . . .

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

பூந்து நடுங்குது. வெக்கம் கெட்ட இந்தாளை முடிச்சு நானும் வெருண்டடிக்கவேண்டிக் கிடக்கு இப்ப நேரம் என்ன?'' என்ற கேள்வியுடன் தன் வசைமாரியை முடிக்கும் போது நல்லூர்க் கந்தசாமி கோவிலில் முற்பகல் பத்து மணிக்கான பூசைக்கு கோபுர மணி முழங்கியது.

சே! எங்கோ—ஏதோ—என்னவோ—நடந்தால் என்ன நான் வேலைக்குப் புறப்பட்ட நேரத்திற்கு வெருளாமல் போயிருந்தால் வேலைசெய்திருக்கலாம். பத்து மணிக்குப் பின் யார்தான் வேலைக்கு அனுமதிப்பார்கள்!

உலகத்தில் உள்ள அசடுகள் எல்லாம் என்முகத்தால் வழிய நான் மனைவியைப் பார்த்து இளித்தேன்.

மனைவி என்னைப்பார்த்துப் பற்களை நெருடுவதைத்தவிர வேறென்ன செய்துவிட முடியும்?

# ஓ, பறவைகளே! சுதந்திரப் பறவைகளே!

**வடக்குக் கிழக்கிற்கு உல்லாசப் பயணிகள் வருகை மெல்ல மெல்லக் குறைந்து இன்று இல்லாமல் போய்விட்டது. பயணிகள் வடக்குக் கிழக்கை மறந்தாலும் பறவைகள் மறக்கவில்லை. பலதேசங்களிலிருந்தும் பருவம் தோறும் பல இனப் பறவைகள் உல்லாசப் பயணம் மேற்கொண்டு இங்கு வருகின்றன. ஆனால் இன்று இங்கு நடைபெறும் ஆரவாரங்களால் உல்லாசப் பறவைகளின் வருகை என்ன ஆகுமோ?**

உல்லாசப் பயணிகளின் வருகை இவ்வாண்டு மிகவும் அதிகரித்துள்ளதென்றால் யாவரும் ஆச்சரியப்படக்கூடும். உல்லாசப் பயணிகளாவது இப்பக்கம் வருவதாவது என நினைக்கவும் கூடும். காரணம் 1983ல் தமிழர்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன் செயல்களின் பின் இந்நாட்டுக்கு வரும் உல்லாசப் பயணிகளின் வரவுத் தொகை மிகவும் வீழ்ச்சியடைந்துவிட்டது. அதன்பின் ஒருபோதும் இதில் முன்னேற்றம் காணப்படவில்லை. பாரிய அளவில் கட்டப்பட்ட நட்சத்திர ஹோட்டல்கள் எல்லாம் வெறிச்சோடிக்கிடக்கின்றன. அதை நம்பிக் கோடிக்கணக்கில் முதலிட்டோர் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

எனினும் ஒவ்வோராண்டும் பருவநிலை மாற்றமடையும் போது நாம் அழைக்காமலேயே இந்நாட்டினுள் பல வகையான பிறதேசத்துப் பறவைகள் பெருமளவில் வந்து உல்லாசமாகக் கூடுகின்றன. இவையும் ஒருவகையில் நம் நாட்டிற்கு வரும் உல்லாசப் பயணிகள் தாம். இயற்கையின் உந்துதலாலும், எமது நாட்டின் தட்பவெப்ப நிலையின் ஏதுவாலும் கவரப்பட்டே இவை இங்கு வருகின்றன. நம்மவர்கள் நாட்டை விட்டே செல்லும்போது இந் நாட்டை நேசிக்கப் பறவைகளாவது இங்கு வருகின்றனவே.

### பலவகைப் பறவைகள்

பலவகைப் பறவைகள் நமது வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சமீபகாலமாகத் தென்படு

“ஸ்மிருதி”

வதை, பட்சிகளை ஆர்வத்துடன் அவதானிக்கும்பலரும், அங்குமிங்கும் பிரயாணஞ் செய்பவர்களும் கண்டிருப்பர். விதவிதமான நாரைகள், வாத்துக்கள், தாராக்கள், அன்னங்கள் என்று இவை பல வகைகளில் காணப்படுகின்ற போதிலும் இப்பிரதேசத்திற்கு இவை அந்நியமானவையே.

வெள்ளைக்காரர் தம்நாட்டுக்குளிரில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக வெப்ப வலைய நாடுகட்கு உல்லாசப் பயணிகளாகச் செல்வதைப் போன்றே, அதுபோல இப் பறவைகளும் குளிர்காலத்தில் தமது இருப்பிடம்விட்டு வெப்பமண்டல நாடுகளான, மத்திய கிழக்கு நாடுகள், ஆபிரிக்கா, சீனா, இந்தியா, இலங்கை போன்ற நாடுகட்கு அதிக எண்ணிக்கையில் வந்து விடுகின்றன.

இங்குள்ள குச்சவெளி, நிலாவெளி, திருமலை, பாசிக்குடா உல்லை போன்ற கடற்கரைகளின் புகழ் எப்படி மேல் நாட்டாரை சுண்டிக்கவர்ந்து இழுக்கின்றதோ அதே போன்றே வடக்கிலும் கிழக்கிலுமுள்ள இடங்கள் இப் பறவைகளுக்குச் சொர்க்க புரியாயுள்ளன. இங்குதான் இவை விரும்பும் சதுப்புநிலங்களும், உப்பங்களிகளும், உவர் ஏரிகளும், கரைச்சிகளும், குளம்குட்டைகளும் நிறைந்து காணப்படுகின்றன. அத்துடன் கிழக்கு மாகாணத்தின் தென்கோடியில்தான் புகழ் மிக்க பறவைகள் சரணாலயமான ''கூமுனை'' அமைந்துள்ளதாலும் பறவைகள் இங்கு ஏராளமாக வருகின்றன. இதுவே இவற்றின் ஐந்து நட்சத்திர ஹோட்டலாகும்.

### தொலை தேசங்களில்

அமெரிக்க, ஐரோப்பிய, மத்திய ஆசிய பறவைகள் குளிர் காலத்தில் வெவ்வேறு நாடுகளை நாடிச்செல்லும். இந்தியாவின் தென்கோடியிலுள்ள, பறவைகள் சரணாலயமான 'வேடந்தாங்கலு'க்கும் இவைவருகின்றன. அங்கிருந்து பாக்குநீரிணையைக் கடந்து மன்னார்க்குடாவினூடாக மன்னாரையடைந்து; அங்குள்ள தரவைக்கடலிலும், உவர் ஏரிகளிலும் குளம்குட்டைகளிலும் தங்குகின்றன. பின் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, அநுராதபுரம், திருமலை மட்டக்களப்பு ஊடாக 'கூமுனையை'அடைகின்றன. வேடந்தாங்களுக்கு இம்முறை பத்தாயிரத்திற்குமதிகமான பறவைகள் வந்துள்ளதாக கணித்துள்ளனர்.

'கூமுனே'அம்பாறை மாவட்டத்தின் கரையோரம் தென் கிழக்காக, பாணமைக்கு அண்மையில் உள்ளது. இது தெற்கே குமுக்கன் ஆற்றையும்; கிழக்கே கடலையும், வடக்கிலும் மேற்கிலும் வனாந்தரங்களையும் எல்லைகளாகக் கொண்ட மிக உன்னதமானதோர் சரணாலயமாகும். இப் பிரதேசமானது ஏரிகளாலும், சதுப்பு நிலங்களாலும், நாணற்புற்பத்தைகளைக் கொண்ட குளம் குட்டைகளாலும், பறுகுக் காடுகளாலும் சூழப்பட்ட ஓர் ரம்மியமான பிரதேசமாயுள்ளது. இதனாலேயே அந்நியப் பறவைகட்கும், ஏன் நம் உள்ளூர்ப் பறவைகட்கும் இது ஓர் சொர்க்க புரியாயுள்ளது வியப்பானதல்ல. இங்கே ஆர்வமுடன் செல்பவர்கள் இப்பட்சிகளின் வேறுபாடான இனிய ஒலிகளாலும்; அவற்றின் சல்லாபத் தொனிகளாலும்; எக்காளச் சதங்களாலும் கவரப் படுவதுடன், அவை அங்கு அடிக்கும் கொட்டத்தைப் பார்த்து ஆச்சரியப்படுவதில் வியப்பேதுமில்லை.

(மிகுதி அடுத்த வாரம்)

## மனித உறவுகள்

[5ம் பக்கத் தொடர்ச்சி]

களில் தென் கொரியா. பிலிப்பைன்ஸ், யப்பான், இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் ஒன்றரை லட்சத்துக்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் இருந்துகொண்டு வருடாந்தம் அங்கு மூன்று லட்சம் குற்றங்கள் செய்தபடி, எப்போது போர் வரும் எனக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

★

### குண்டின் மேல் அணிசேரா நாடுகள்

வௌவால் பறவையா, மிருகமா எனப் பிரிப்பதில் பலத்த சந்தேகம் உண்டு. அஃதுபோன்று அணிசேரா நாடுமீது குண்டு விழுமா, விழாதா என்பதற்கு ஆரூடம் கூறமுடியாது. சில அமெரிக்கர் பலியானதற்கு [லிபிய] அதிபரின் வாசஸ்தலம்மீது குண்டு வீசிய கொடிய வல்லரசு உலகம் இது. உலகநாடுகள் கண்டித்தபின்பே ஐயோ எனக்குத் தெரியாது; இந்த விமானங்கள் பிரிட்டனில் இருந்தா பறந்து சென்றன என்று இரும்புச் சீமாட்டி கையை விரித்தார். அதனால் எந்தப் புற்றில் எந்தப் பாம்பு யார் யாரைத் தீண்டுமோ என்பது பற்றி நாம் அறியோம்.

நூலகங்களும், ஆஸ்பத்திரிகளும், அகதி முகாம்களும் குண்டு வீச்சில் தப்பாத இந்த உலகிலே அணிசேரா நாட்டில் இருப்பதால் எமக்கு என்று லாபம் எதுவும் இல்லை.

890 கோடி ரூபா இந்தியா தனது பாதுகாப்புக்குச் செலவிடுகின்றது என்றால் ஏவுகணை மீது நின்றுதான் அது தன் அணிசேராச் சங்கை எடுத்து ஊதவேண்டியுள்ளது.

★

### இறைவா......

இறைவனே இன்னும் சில நூற்றாண்டுகள் நீ அருவுருவமாக இருப்பாயாக. உருப் பெற்றால் இங்கே மனிதர்கள் உனக்கு 'நியூட்ரன்' தரக் காத்திருக்கிறார்கள். என்று தான் சொல்லத்தோன்றுகிறது.

## நாடோடிக் கதைகள்

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

மயிர் நீளமானதாகவும், அடர்த்தியாகவுமிருந்தபடியால் நண்டு தனது வாலில் பிடித்திருப்பதை அதால் உணரமுடியவில்லை.

''சரி ஓடு''

நண்டு சத்தமிட்டது.

நரி மின்னல் வேகத்தில் வயல்களுக்குக் குறுக்கால் பாய்ந்து ஓடியது. விரைவில் அது காட்டரச மரத்தடியை அடைந்தது.

நண்டு எவ்வளவு தூரத்தில் வருகின்றது என்பதைப் பார்ப்பதற்கு நரி திரும்பியது.

''நரிப்பிள்ளையே ஏன் இவ்வளவு தாமதமாக வந்தீர்?''

தனக்குப் பின்புறத்தில் நண்டின் குரலைக் கேட்ட நரிக்குப் பெரும் ஆச்சரியம்.

''உம்மால் இங்கு வரமுடியுமா என்பதைப்பார்ப்பதற்கு, நான் இந்தக் காட்டரச மரத்தில் ஏறிக்கூடப் பார்த்தேன்.

நரி வாயைப் பிழந்தது.

''இதை யாரால் நம்பமுடியும்?''

தலைகுனிவுடன் நரி கூறியது.

இதன்பின் நரி ஒரு பொழுதும் நண்டைக் கிண்டல் செய்வதில்லை.

# விண்ணடைந்த வேய்ங்குழல்

இசை மேடைகளிலும், வானொலி, தொலைக்காட்சிகளிலும் தோன்றிப் புல்லாங்குழல் கொண்டு 'அமுது பொங்கித் ததும்பும் நற்கீதம்' வழங்கிய 'மாலி' திடீர்மரணமானார் என்ற செய்தி இசையுலகிற்கு அதிர்ச்சியைத் தந்தது. சுமார் அரை நூற்றாண்டு காலமாகத் தமது வேய்ங்குழலால் பண்டிதரையும் பாமரரையும் மயக்கியவர் மறைந்தது பேரிழப்பாகும்.

தென்னிந்தியாவில் பலர் வேணுகானத்தில் விற்பன்னர்களாகத் திகழ்ந்துள்ளார்கள். உதாரணமாகப் பல்லடம் சஞ்சீவராவ் என்னும் வித்துவான் இவருக்கு முன்பு பிரபல்யமாக இருந்தார். ஆனால் மாலியின் வேணுகானம் தெய்வீக கானமாகவும் கண்ணனின் கானத்தைக் கோபியர்கள் கேட்டவுடன் ''கள்ளால் மயங்குவது போல கண் மூடி வாய் திறந்தே'' கேட்டு நின்றனர். ஐந்து கட்டைச் சுருதியில் அமைந்த புல்லாங்குழலில் அபார கற்பனைச் சக்தியுடன் 'மாலி' வாசிக்கும்போது மகுடிக்குக் கட்டுண்ட நாகம் போல ரசிகர்கள் அமர்ந்திருந்து கேட்டதைப் பல தடவைகள் கண்டோர் ஆச்சரியப்பட்டனர். சண்முகப் பிரியா, சகானா, காம்போதி போன்ற இராகங்களை ஆலாபனை செய்யும்போது அவ் வேணுகானம் தேவகானமாகவே ஒலிக்கும், கீர்த்தனைகளை அழகுற வாசித்தபின்னர் நிரவல், கற்பனாஸ்வரம் போன்றன தொடரும். மக்கள் ரசிக்கும்போது தாமும் சேர்ந்து அவர்களுக்கு இன்னமுது படைக்கும் தாய்போல் அவர்கள் மகிழ்ச்சியில் தாமும் மகிழ்வார் மாலி.

தமிழ்நாட்டில் பிராமண குடும்பத்தில் உதித்த டி ஆர். மகாலிங்கம் சிறு பராயத்திலேயே வாய்ப்பாட்டும், புல்லாங்குழல் இசையும் கற்றார். ஒரு நாதஸ்வர வித்வானிடமே தாம் புல்லாங்குழலைப் பயின்றதாகக் கூறும் இவர், எட்டு வயதுச் சிறுவனாக இருக்கும் போதே வேய்ங்குழலை மேடையில் வாசித்ததாக அறிகிறோம். 12-வது வயதில் மாஸ்ரர் மகாலிங்கம் என்ற பேரில் இலங்கையில் வேணுகானக் கச்சேரி நடத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் தொடர்ந்து வடநாட்டிலும் மலேசியா போன்ற நாடுகளிலும் இவரின் வேணுகானம் ஒலித்தது.

இசைத்தட்டுகளில் நவரச கன்னட, அரிகாம்போதி, மகுடி போன்ற இராகங்களும் அவற்றில் கீர்த்தனைகளும் இன்னும் மக்களை மகிழ்விக்கின்றன.

இவரின் பிரதான சிஷ்யர்களான ஸ்ரீமதி என். கேசி, கே. ஆர். கணபதி, ரமணி போன்றோர் வேணுகானத்தில் அன்னாரின் பாணியையே கையாளுகின்றனர். இப்போது திரு ரமணி என்பவரே மிகவும் பிரசித்திபெற்று விளங்குகின்றார்.

சி. குமாரசாமி

நாதஸ்வரத்தில் திருவாவடுதுறை இராஜரத்தினம்பிள்ளையைப் போன்று புகழ்பெற்று விளங்கியவர் வேணுகான மகாலிங்கமாவர் அன்னாரைப் போலவே இவரின் புகழும் கடல் கடந்து விளங்கியது. மாலியின் இசையில் தம்மைப் பறிகொடுத்த அமெரிக்கப் பெண் இவரை மணந்தார். சுமார் பத்து ஆண்டுகள் அமெரிக்காவில் தங்கியிருந்து வேணுகானத்தை இசைத்து அமெரிக்கர்களையும் மகிழ்வித்தார்,

சில மாதங்களுக்கு முன்னர் மகாலிங்கம் தம்பதியினர் தமிழ்நாட்டுக்குத் திரும்பினர். கடைசியாக மாலி அவர்கள் 1986 மார்ச் 2-ம்தேதி சென்னை தொலைக்காட்சியில் தோன்றித் தமது சிஷ்யையுடன் வேணுகான மழைபொழிந்தார். அந்நிகழ்ச்சி இன்றும் பசுமையாக இருக்கிறது மனதில்.

பல இசைச்சங்கங்கள் இவருக்கு ''வேணுகான மன்னன்'' ''வேணுகான சக்கரவர்த்தி'' என்ற புகழாரங்களைச் சூட்டின. இந்திய அரசு இவருக்கு 'பத்மஸ்ரீ' என்ற உயர்ந்த பட்டத்தை அளித்துக் கௌரவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாரம் எப்படி?

## இன்று

மாதம்: வைகாசி
திகதி: 25 (1986-06-08)
கிழமை: ஞாயிறு
திதி: பிரதமை
மு இ வரை
நக்ஷத்திரம்: மிருகசீரிடம்
மு. இ வரை

### மேடம்

குடும்பத்தில் குதூகலம். நீண்ட நாள் எதிர் பார்த்த நல்ல செய்தி இவ்வாரம் கிட்டும். அந்நியர் உதவி தாராளமாக உண்டு. தேடிய உறவு உங்களை நாடியே வரும். வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு.

### இடபம்

வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று. வெளியிடத்துப் பயணம் வேதனை தரலாம். பொருள் முடை கென்படும். கடன் படவும்நேரிடும். பெரியோரைப் பகைத்துக் கொள்ளாமல் பொறுமையைப் பேணி நடக்கவும்.

### மிதுனம்

வாழ்க்கையில் சிரமங்கள் அதிகரிக்கும். சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படலாம் ஆசை அலைகள் மோதும் வாழ்க்கையில் நிம்மதியற்ற நிலை தென்படும். ஆணவப் போக்கினால் பலரைப் பகைத்துக்கொள்ள நேரலாம்.

### கடகம்

ஆராய்ச்சியாளர்களுக்குப் பொன்னான வாரம். இனபந்துக்கள் கொண்டாட்டம் இடம்பெறும், அவசர அழைப்புக்கள் உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரலாம் எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு

### சிங்கம்

பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும். உதவி செய்யப் போய் உபத்திரவத்தைத் தேடிக் கொள்வீர்கள் வெளியிடத்துத் தொடர்புகளில் மந்த நிலை தென்படும். சகோதரர் ஒருவருடைய உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

### கன்னி

அறிவுப் பணியில் ஆர்வம் பிறக்கும். சாரதிகள் பயனடைவர். தாய் வழி ஆதரவு அவசியம் கிடைக்கும். புண்ணியஸ்தல யாத்திரை யொன்றும் மேற் கொள்ளப்படலாம். உற்சாகமான வாரம்.

### துலாம்

சூழ்நிலையில் நல்ல மாறுதல்கள் தென்படலாம். அமைதியான வாழ்வுடன் தெய்வத்தின் அருளும் கிடைக்கும். தொழில் துறையிலும் பாராட்டுச் சேரும் புத்திரர்களால் மகிழ்ச்சிக்கும் இடமுண்டு.

### விருச்சிகம்

எதிர் பார்த்த விஷயத்தில் ஏமாற்றம் தென்படும் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள். சிலருக்கு ஆயுதபீடைக்கும் இடமேற்படும். குடும்பத்தில் குறை கேட்க நேரிடும். எவ்விடபத்திலும் இவ்வாரம் பொறுமையைக் கடைப் பிடிப்பது நன்று.

### தனுசு

வாழ்க்கையில் தென்றல் வீசும். காதல் சிட்டுக்களுக்குச் சிறப்பான வாரம். கணவன் மனைவி உறவு இறுக்கமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் தென்படும் உறவினாளின் ஆதரவும் பெற்றோரின் ஆசியும் கிட்டும்.

### மகரம்

ஆணவத்தைத் தவிர்க்கவும். எவரையும் பகைத்துக் கொள்ளாதீர். பெண்கள் மிகவும் அவதானமாக இருக்கவும் அவப்பெயர் கேட்க நேரிடலாம். முன்னேற்றத்தில் தடையுமுண்டு. போக்குவரத்து விடயத்தில் நிதானம் வேண்டும்.

### கும்பம்

பயன் தரும் திட்டங்களில் கவனம் செலுத்துவீர். நீண்ட நாள் மூடு மந்திரமாக இருந்த உண்மை அம்பலத்திற்கு வரலாம்: நிலைமையைச் சமாளிப்பதில் வெற்றி காண்பீர்கள் உங்கள் உற்சாகத்தில் பெற்றோரும் துணை நிற்பர்.

### மீனம்

முயற்சியால் முன்னேற்றம் உண்டு. பாராட்டுகளும் கிடைக்கும். கடமையில் புதிய ஆர்வம் ஏற்படும். சிலருக்கு இடமாற்றத்திற்கும் இடமுண்டு. கூட்டு வியாபாரத்தால் சிறந்த பலனையடைவீர்.

திருமலை
**க.வே.ரவீந்திரன்**

## மாணவர் மனதில் நிறைந்தவர்



கல்விகற்பிப்பதோடுமட்டும் நின்றுவிடாது மாணவர்களுக்குத் தேவையான வசதிகளையெல்லாம் பாடசாலையில் செய்துகொடுத்து அவர்களுக்கு ஆதரவாகவும், ஊக்கசக்தியாகவும், நல்ல வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர் திரு தோமாசஸ் டானியல்.

முன்னாள் அதிபர் திரு. டானியலின் பிரிவு ஆசிரிய உலகுக்கு ஒரு பெரும் இழப்பு. அவரை அறிந்த மாணவர்கள் அவரது பலவித உதாரகுணங்களை என்றுமே நெஞ்சில் நிலை நிறுத்திவைத்திருப்பர். தம்மிடம் பயின்ற ஒவ்வொருமாணவனின் வளர்ச்சிக்காக அயராது உழைத்த உத்தமர். சமயத்துறையில் நல்ல ஈடுபாடு காட்டிய அவர் மாணவர்களிடையே மதப்பற்றை வளர்த்தார்.

நவாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு டானியல் 1940 ம் ஆண்டு முதல் 65-ம் ஆண்டுவரை ஆனைகோட்டை றோ க தமிழ பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய போது 5-ம் வகுப்பு வரையிருந்த இப்பாடசாலையை க பொ. த. வகுப்புவரை உயர்த்த முன்னின்று உழைத்ததை எவரும் இலகுவில் மறந்துவிடமாட்டார்கள். இவர் இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் இப்பாடசாலை கல்வித்தரத்தில் சிறப்பாக முன்னேறியது என்பதைப் பலர் அறிவர்.

ஆசிரிய சேவை மட்டுமன்றிப் பல பொதுநலப்பணிகளிலும் முன்னின்று உழைத்து வந்த அவர் தமது நல்ல ஆலோசனைகளைச் சமுதாய நலனுக்காக அவ்வப்போது வழங்கிவந்தார்.

திருமதி தி. செல்வநாதன்.

## உலகக்கிண்ண உதைபந்தாட்டம்:
# கால் இறுதிப் போட்டிக்கு பிரேஸில் கோஷ்டி தெரிவு

[றியோடி ஜெனீரோ]
மெக்ஸிக்கோவில் நடைபெறும், ''உலகக் கிண்ண'' உதைபந்தாட்டப் போட்டியில், 2-வது சுற்றுப்போட்டிகளில் விளையாடுவதற்கு பிரேஸில் கோஷ்டியே, தற்போது முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பிரேஸில் கோஷ்டி மட்டுமே இதுவரை நாலு புள்ளிகளை, இரண்டு போட்டிகளில் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இரண்டு போட்டிகளில் கலந்து கொண்ட, தற்போதைய சாம்பியனான இத்தாலி-2 புள்ளிகளையும் ஆர்ஜன்டீனா-3புள்ளிகளையும், பிரான்ஸ்- 2 புள்ளிகளையும், ரஷ்யா- 3 புள்ளிகளையும, பெற்றிருக்கின்றன.

### பிரேஸில் வெற்றி

நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பிரேஸில் அல்ஜிரியாவை 1-0 கோலால் வெற்றி பெற்று, 2-வது சுற்றுப் போட்டியில் விளையாடுவதற்கு தகுதி பெற்றுள்ளது

ஹங்கேரிக்கும், கனடாவுக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், ஹங்கேரி 2-0 கோல்களால் வெற்றி பெற்றுள்ளது.

இங்கிலாந்துக்கும், மொருக்கோவுக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு ஆட்டம், வெற்றி - தோல்வியின்றி முடிவடைந்தது.

### இன்றைய ஆட்டங்கள்

குறூப்- B :- பெல்ஜியம் எதிர் ஈராக்.
குறூப்- E :- மே. ஜேர்மனி எதிர் ஸ்கொட்லன்.
குறூப்- F :- போலந்து எதிர் போர்த்துக்கல்.
[வி]

## சமகால...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

ஒன்று அத்தனை நன்றாக அமையவில்லை.''

அரசு,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

''தமிழ் ஈழத்தின் எதிர்கால ஓவியக்கலை ஒழிவிட்டுப் பிரகாசிக்கப் போகின்றது என்பதை இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஓவியக் கலை அரங்கேற்றம் குறிகாட்டிநிற்கிறது. இக்கலைஞர்களை வளர்த்தெடுக்க வேண்டியது ஈழவர் பெறுப்பு.

**இ. பாலசுந்தரம்.**
தமிழ்த்துறை,
யாழ் பல்கலைக்கழகம்

''கலை இலக்கியங்கள் சமகால வாழ்விலிருந்து பிரிக்கப்பட முடியாதவை என்பதை இவர்களது பல ஓவியங்களும் நிரூபிக்கின்றன. பல்வேறு தறைபாடுகள் இருந்தபோதும் எதிர்கால மேதைமை ஒவ்வொரு ஓவியங்களிலும்வெளிப்படுகின்றது. எனது நல்லாசிகள்''

**சசி. கிருஷ்ணமூர்த்தி**

''இன்றைய யாழ். சூழ்நிலையில் இப்படி ஒரு நண் காட்சியைப் பார்த்தது மகிழ்ச்சியைததருகின்றது. பல அர்த்தங்களிலும் இன்று காணப்படும் விழிப்புணர்ச்சியைஇது பிரதிபலிக்கின்றது என எண்ணுகின்றேன். இந்த இளங் கலைஞர்கள் சமகாலப் பிரக்ஞையுடன் தம் படைப்புகளைத் தந்திருக்கிறார்கள்.

கலைஞர்களுக்கு வாழ்த்துக்கள்.''

**ஐ. சண்முகன்,**
குப்பிழான்.

''சமகாலக் கொடுமைகளும் அவலங்களும் சிறந்த முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்விதத்தில் இவை அழியாத ஓவியங்களே. சடவுளரை நவீன ஓவியங்களில் காண்பதுவும் குறிப்பிடத்தக்கதே. பிரதிமை ஓவியங்களும் குருமாரின் (ஆசிரியர்கள்) ஓவியங்களுங்கூட திறம்பட உள்ளன.

ஓவியவைப்புமுறை ஓவிய அரங்கொன்றில்லாத குறையை எடுத்துக்காட்டுகிறது.

கலைஞர்களுக்குப் பாராட்டுக்கள்.''

**செ. யோகராசா,**
கரணவாய்.

## அமரர் விஸ்வலிங்கம் மறைவு:
# 'ஈடு செய்யவே முடியாத பேரிழப்பு'

(யாழ்ப்பாணம்)

''அரச அடக்கு முறைகள் சமூக அநீதிகள் முதலியவற்றைக்கண்டு குமுறியெழுந்து அவற்றை அஞ்சாமல் எதிர்த்துச் சங்கநாதம் செய்த நேர்மையின்சிகரம் சரிந்துவிட்டது''.

சமூகத் தொண்டர் கா. விஸ்வலிங்கம் மறைவு குறித்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின ஆட்சிக் குழு சார்பில் இணைச் செயலாளர் திரு. என். சோமகாந்தன் வெளியிட்ட அனுதாபச்செய்தியல் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும்கூறப்பட்டிருப்பதாவது:

''ஆற்றொணக் கொடுமைகளுக்கு ஆளாகி அல்லற்பட்டுநிற்கும் மக்களை அரவணைத்து அவர்களின் கண்ணீரைத் துடைத்து அவர்களுக்கு ஆறுதலும் புனர்வாழ்வும் அளிப்பதில் முன்னின்று செயலாற்றிய சேவையின்சின்னம் மறைந்து விட்டது.

பத்து ஆண்டுகளுக்குமேல் தொடர்ந்து நாவலர் சபைக்கு அவர் ஆற்றிய தொண்டுகள் அளப்பரியவை. கூட்டுப் பொருளாளராக பின்னர் இணைச்செயலாளராய் அமர்ந்து சபையின் ஏற்றத்துக்கும் எழுச்சிக்கும் சிறப்பான உயர்ந்த வளர்ச்சிக்கும் அயராதுழைத்த சேவையின் சின்னம் சிறந்த வழிகாட்டி, நீதியை நிலைநாட்ட நியாயத்தை நிறைவேற்ற துணிவாகச் செயலாற்றிய ஒப்பற்ற அற்புதத்தலைவரை இழந்து தவிக்கிறோம் தத்தளிக்கிறோம். எம்மால் ஈடுசெய்யவே முடியாத பேரிழப்பு இது.''
(க)

## உற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 1ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ச்சியாக பன்னிரெண்டு தினங்கள் நடைபெறும் இவ் உற்சவம் 12ம் திகதி வியாழக்கிழமை நற்கருணை தினமும் 13ம் திகதி காலை திருநாள் திருப்பலியுடனும் முடிவடையும்.

அருட்திரு விக்ரர் ஜெயசிங்கம் அ. ம. தி. அடிகளார் அருளுரையாற்றி ஆராதனை நடத்துவார். இவ்வருடம் திருச்சுரூபப்பவனி இடம்பெறமாட்டாதென தெரியவருகிறது.
(சிவ)

## வருடாந்த உற்சவம்

[யாழ்ப்பாணம்]

அச்சுவேலி அருள்மிகு காட்டுமலைக் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் எதிர் வரும் 13ந் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 25 தினங்கள் மகோற்சவம் நடைபெற்று யூலை மாதம் 8 ந் திகதி பூங்காவனத் திருவிழாவுடன் நிறைவுறும். யூலை 3ந் திகதி கார்த்திகைத் திருவிழாவும் யூலை 5ந் திகதி சப்பரத்திருவிழாவும் யூலை 6ந் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறுகின்றன.

இவ்வாண்டு மகோற்சவத்தின்போது கோவிலுக்குப் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திருமஞ்சத்தின் வெள்ளோட்ட நிகழ்ச்சியும் மஞ்சத் திருவிழாவன்று புதிய மஞ்சத்தின் வீதியுலாவும் நடைபெறவுள்ளன.

## 41-ம் நாள் நினைவஞ்சலி

வீரவேங்கை அலிஸ்ரன்



எஸ். ஏ. ஆறுமுகம்
அலிஸ்ரன்
மதுரநாயகம்
[குமார்]

அன்னையின் மடியில்:
20-11-1964

ஆண்டவன் அடியில்:
30-04-1986

எங்கள் அன்பு மகனே!
குமரா!

விடுதலையின் பேரால் உன் உயிர் விலைபோய் விட்டது நாட்டுக்கு கலங்கரைத்தீபமாய் ஒளிகாட்டிய வீட்டு விளக்கான நீ அணைந்து போனாயே! உன்னைப் பிரிந்தாலும் உன் நினைவுகளை எம்மிடமிருந்து பிரிக்கமுடியாது!

இவரின் நித்திய பேரின்பத்துக்காக 09-06-1986 திங்கள் மாலை 4 மணிக்கு மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலிப் பூஜையில் கலந்து அவருக்காகச் செபிக்குமாறு அனைவரையும் வேண்டுகிறோம்

அப்பா, அம்மா,
அக்கா, சகோதரர்கள்.
'அன்ரனி வாசா'
நாகம்மாள் வீதி,
உடுவில்.

C 2762


# M. N. C.
# எம். என். ஸி.

சகல வைபவங்களுக்குமுரிய பந்தல், கதிரை, கிளாஸ், கோப்பை, டிரே முதலியன வாடகைக்கு விடப்படும்.

உரிமையாளர்:-
**N. நிமால்சந்திரன்,**
இளவாலை.
(C 2648)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் விஸ்வலிங்கம் மறைவு:

# “நேர்மையான செயல் வீரராகத் திகழ்ந்தார்”

### அஞ்சலிக் கூட்டத்தில் உரை

[யாழ்ப்பாணம்]

''தமிழ் மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதனுலேயே அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் அளப்பரிய பணிகள் வெளியில் தெரியாமல் அமைதியாக செய்யப்பட்டுவந்தன.

இவ்வாறு அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் அமரர் கா. விசுவலிங்கத்தினது மறைவு குறித்து நல்லூர் இந்து வீதியில் நடாத்தப்பட்ட அஞ்சலிக்கூட்டத்திற்கு தலைமைவகித்துப் பேசும்போது பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்: தமிழ் மக்களுக்கு இன்னல் ஏற்பட்டுள்ள இவ்வேளையில் ஆரம்பிக்கப்பட்ட பிரஜைகள் குழுக்களின் போக்கைப் பலப்படுத்தியவர் அமரர் விசுவலிங்கம். அவரே பிரஜைகள் குழுவின் அச்சாணி. அரசாங்கத்தின் உதவி எதுவுமின்றி இயங்கிய ஒரே ஸ்தாபனம் அகதிகள் புனர்வாழ்வுக் கழகமேயாகும். இக்கழகத்தின் பணியில் சகல தரப்பினரும் இணைந்து தொடர்புபட்டு செயல்பட்டனர். இதற்குக் காரணம் அமரர் விசுவலிங்கத்தின் நேர்மையான குணமேயாகும்.

யாழ். மாநரசபை ஆணையாளர் திரு. சி. வி.கே. சிவஞானம் கூறியதாவது; திரு விசுவலிங்கம் விமர்சகராக ஒருபோதும் இருந்தது கிடையாது. அவர்செயல் வீரராகவே திகழ்ந்தார். சமய ஸ்தாபனங்கள் பலவற்றில் கடமைபுரிந்த அவர் நேர்மைபாகச் செயல்பபட்டவர்.

யாழ் ஆயர் திரு.பி. தியோகுப்பிள்ளை கூறியதாவது:- வெளிநாட்டு உதவிகள் அகதிகள் புனர்வாழ்வுக் சழகத்துக்கு கிடைத்துவந்தன. அமரர் விசுவலிங்கத்தின் நேர்மையை அறிந்துகொண்ட வெளிநாட்டு உதவி ஸ்தாபனங்கள் தொடர்ந்துப் உதவிகளை வழங்கின. இன்னல் நிறைந்து தமிழ் மக்களின் இன்றையவாழ்வில் அகதிகள் புனர்வாழ்வுக் சழகத்தின் சேவை தொடரப்பட வேண்டும்.

பேராசிரியர் சண்முகதாஸ், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. இராமநாதன், முன்னுள் யாழ் கல்விப்பணிப்பாளரும், சுன்னுகம் பிரஜைகள் குழுத் தலைவருமான திரு கி ... ணிக்சவாசகர் உட்படப் பலர் பேசினுர்கள். [ஐ]


## சிறுநீரகக் கோளாறு

கடுமையான கதிரொளியில் தொடர்ந்து திரிதல், உணவில் உப்பை மிகையாகச் சேர்த்துக்கொள்ளல், ஆங்கில முறை மாத்திரைகளை அதிகம் சாப்பிடுதல், தங்கம், தாமிரம் முதலான உலோகப் பஸ்பங்களைத் தொடர்ந்து சாபபிடுதல், ஏர்கண்டிஷன் அறையில் தொடர்ந்து இருத்தல், பாலவினை நோய்கு மருத்துவம் செய்து கொள்ளாதிருத்தல் ஆகிய காரணங்களால் சிறுநீரகக் கோளாறு ஏற்படுப் வாய்ப்பு அதிகமாகிறது.

வாரம் ஒரு முறை வாழைத் தண்டு, முருங்கைக் கீரை, முள்ளங்கி ஆகியவற்றை உணவில் சேர்த்து வந்தால் சிறுநீரகக் கோளாறு ஏற்படாது

சிறுநீரகத்தில் கல் வந்து விட்டாலும் நீர்த்தாரை எரிச்சல் இருந்தாலும், வாழைத் தண்டை இடித்துச் சாறு பிழிந்து ஐம்பது மில்லியளவு காலை, மாலை மூன்று முதல் ஆறுநாள் சாப்பிடக் குணமாகும். 1 கிராம் அளவு படிக்காரம் சேர்த்துச் சாப்பிட்டால் நல்லகுணம் உடனே தெரியும். உடல் எடை குறையும், வீண்சதை கரையும. ''நோயின்றி வாழ'' என்ற நூலில் இத்தகைய எளிய பல முறைகள் உள்ளன.

ஆதாரம்- கலைமகள்
தொகுப்பு- ... கனகராசா



இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப்பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா நாளை நடைபெறுகின்றது. சித்திரத் தேரின் அழகிய தோற்றத்தைப் படத்தில் காணலாம்.


## பெனின்சுலா குறூப்பின் தரமான தயாரிப்பு

★ றெபின் பார் சோப் ரூ. 11-75

★ றெபின் வெள்ளைசோப் ரூ. 2-00

★ றெபின் நீல சோப் ரூ. 2-00

## பெனின்சுலா

சவர்க்காரத் தொழிலகம்,
9, கண்டி வீதி, நாவற்குழி.
(A-726)



## BRITE SOAP WASHES BRIGHT




Net Weight: 130 Grams Price: Rs. 2-25

கைதேர்ந்த தொழிலாளர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிப்பவர்கள்
TURBOW COMMERCIAL - ALAVEDDY

★ ★ ★ ★

பிரகாசமான சலவைக்கு
பிறைற் சோப்
[A 239]


யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

### வடிகால்களுக்கு பக்கச்சுவர் அமைத்தல் வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 1986ம் ஆண்டு யூன் மாதம் 19ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

அட்டவணை

| இல. | வேலைவிபரம் | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கப்படக் கூடியது) | கேள்விப் படிவக்கட்டணம் (மீளளிக்கப்பட முடியாதது) | ஒப்பந்தகாரர் பதிவுத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | பாண்டியன்தாழ்விலிருந்து மறவக்குளம் வரையிலான வடிகாலுக்கு பக்கச்சுவர் அமைத்தல். | ரூ 2000/- | ரூ 250/- | ரூ. 300, 000/- |
| 2. | மறவக்குளத்திலிருந்து மூளாய்வீதி, கடற்கரை வீதி வரையுள்ள வடிகாலுக்கு பக்கச் சுவர் அமைத்தல் | ரூ. 2000/- | ரூ. 250/- | ரூ. 300, 000/- |
| 3. | பாசிக்குளத்திலிருந்து திட்டிவரைக்கும் உள்ள வடிகாலுக்கும் வீரமாமுனிவர் வீதியிலுள்ள வடிகாலுக்கும் பக்கச் சுவர் அமைத்தல் | ரூ. 2000/- | ரூ. 250/- | ரூ. 300, 000/- |
| 4. | இலந்தைக்குளம் வடிகாலுக்கு அணைச்சுவர் அமைத்தல். | ரூ. 1000/- | ரூ. 150/- | ரூ. 200, 000/- |
| 5. | (ஏ) பாஷையூர் விளையாட்டு மைதானத்தில் அமைந்திருக்கும் வடிகால் திருத்தம் செய்தல். (பீ) யாழ். ஆஸ்பத்திரி வீதி மின்சார நிலைய வளவினுள் உப மின் நிலையம் அமைத்தல். | ரூ. 500/- | ரூ. 100/- | ரூ. 100, 000/- |
| 6. | மின்தூண் அரியும் அச்சு அமைத்தல் | ரூ. 500/- | ரூ. 100/- | — |

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 1986ம் ஆண்டு யூன் மாதம் 18ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிவரை அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு கேள்விக்கும் எதிராகவுள்ள கேள்விப் பிணைப் பணம், கேள்விப்படிவக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களின் இணைப்பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சீ. வி. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
05-06-1986.

[A-822]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் தொடரும்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
களுடன் கிடந்த சிவஞானமும் சிறிது நேரத்தில்மரணமானார். அச்சடலம் மீட்கமுடியாத நிலையில் வண்டியிலேயே அநாதரவாககிடக்கிறது.

### இராணுவம் திரும்பியது

ஒரு கட்டத்தில் இராணுவம் திருநகர் ஊடாக ஜெயந்தி நகரைநோக்கி சென்றவழியில் பல பொது மக்களை சுட்டதுடன் கணேசபுரத்தில் பலவீடுகளையும் தீக்கிரையாக்கியது.

ஜெயந்திநகர், கனகபுரம், கணேசபுரம் பகுதி மக்கள் பெருங் கிலி கொண்டு குழந்தைகள், சிறுவர்களைத் தூக்கிக் கொண்டு கால் போன போக்கில் ஓடினார்கள்.

### உணவுப் பொருள்கள் தட்டுப்பாடு

நான்குநாள் யுத்தத்தைத் தொடர்ந்து கிளிநொச்சியில் பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கிராமங்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கும் முக்கிய உணவுக் களஞ்சியங்கள், வர்த்தக நிலையங்கள் அனைத்தும் கிளிநொச்சி நகரில் இருப்பதே இதற்கு காரணமாகும் கிளிநொச்சி நகரில் பல கடைகள் உடைக்கப்பட்டும், தீவைக்கப்பட்டுமுள்ளது கிளிநொச்சி நகரிலிருந்து நான்கு மைல் தூரத்திற்கு பொதுமக்கள் வெளியேறி உள்ளனர்.

### உருத்திரபுரத்தில் அகதி முகாம்

கிளிநொச்சிப் பகுதியில் இடம்பெயர்ந்த அகதிகள் உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களுக்கு உதவிபுரிய அத்தியாவசிய சேவைகள் குழுவொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. இங்கு சுமார் 2000 பேருக்கு மேல் தஞ்சமடைந்துள்ளனர். இதுதவிர பரந்தனில்நவஜீவனம், அக்கராயா குளம் முதலான இடங்களிலும் பெரும் தொகையான பொதுமக்கள் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

### பூநகரியிலும் தாக்குதல்

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பூநகரியில் நல்லூர், ஆலங்கேணி முதலான இடங்களிலும் விமானம் ஒன்று குண்டுமாரி பொழிந்தது. குஞ்சுப்பரந்தன் பகுதியிலும் விமானக் குண்டுவீச்சு நடைபெற்றது.

நேற்றுக்காலை முதல் கிளிநொச்சியில் 'ஷெல்' தாக்குதல் தொடர்ந்து நடைபெற்றது.

# இரு பத்திரிகை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
எதிர்க்கட்சியின் செய்திப்பத்திரிகை ஊழியர் இருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்கள். [ப-க]

# இராணுவம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
செல்லும்வரைபோர் விமானங்கள் அப்பகுதி எங்கும் தாக்குதல் நடத்தியது. பல வீடுகள் சேதமடைந்தன.

"இராணுவத்தினர் சுட்டபடி வந்த போது வீட்டுக்குள்ளிருந்த பலர் காயமடைந்தனர். வீட்டுக்குள் இருந்த நானும் காயமடைந்தேன். மாலையில் இராணுவத்தினர் திரும்பி முகாமிற்கு சென்றனர், காயமடைந்த நானும் மற்றவர்களும், ஆஸ்பத்திரிக்குச் சென்றோம். அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம் இங்கு வந்தோம்" [க]

# அரசு

[1ம பக்கத் தொடர்ச்சி]
னதாகவும், மூன்றுபேர் காயமடைந்ததாகவும் அரச வட்டாரங்கள் தெரிவித்தன,

கடந்த வியாழனன்று நடைபெற்ற மேற்படி சம்பவத்தில் பாதுகாப்புப் படையினரை கிளிநொச்சியில்ஏற்றிச் சென்ற ஹெலிகொப்டர் ஒன்றைத் தீவிரவாதிகள் தாக்கியதாகவும் இச் சந்தர்ப்பத்தில் எவருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லையென்றும், ஹெலிகொப்டர் பாதுகாப்பாக தரையிறக்கப் பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப் பட்டது. [பி]

# இன்று யாழ். மாவட்ட மெய்வல்லுநர் போட்டி

[யாழ்ப்பாணம்]
யாழ். மாவட்டக் காரியாதிகாரிகள் பிரிவுகளிடையே வருடாந்தம் நடைபெறும் மெய்வல்லுநர் போட்டி இன்று சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படிப் போட்டி இன்று காலை 8-30-க்கு ஆரம்பமாகி மாலை 4-15 வரைநடைபெறும்.

இப்போட்டிக்கு யாழ் அரசாங்க அதிபர் திரு. வி. எம். பஞ்சலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். வெற்றி வீரர்களுக்கு திருமதி பஞ்சலிங்கம் பரிசுகளை வழங்குவார். [வி]

# திருமலையில் தமிழ் பிரயாணிகள் கடத்தல்?

[திருமலை]
திருகோணமலைநகருக்குவெளி மாவட்டங்களிலிருந்து பஸ்களில் வந்து சேரும் தமிழ்ப் பிரயாணிகள் ஆயுதம் தாங்கியோரால் கடத்திச் செல்லப் படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவனியா, மட்டக்களப்பு. கொழும்பு ஆகிய இடங்களிலிருந்து நேற்று திருமலை நகருக்கு 3 பஸ்களில் அதிகமான பிரயாணிகள் வந்து சேர்ந்தனர்.

பஸ்தரிப்பு நிலையத்தில் நின்ற ஆயுதம் தாங்கியோர் பஸ்களுக்குள் ஏறி அங்கிருந்த தமிழர்களை ஆயுதமுனையில் கடத்திச் சென்றுள்ளனராம். கடத்தப்பட்டவர்களின் நிலை குறித்து இதுவரை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (மா)

# வல்வெட்டித்துறையில் ஷெல், பீரங்கித் தாக்குதல் சிறுமிபலி; 10பேர் காயம்

(வல்வெட்டித்துறை)
வல்வெட்டித்துறை பகுதியில் நேற்று நடந்த 'ஷெல்' பீரங்கித்தாக்குதல்களில் சிறுமி பலியானார். இருபெண்கள் உட்பட பத்துப்பேர் காயமடைந்தனர். பல வீடுகள் சேதமடைந்தன.

இரு ஹெலிக்கொப்டர்கள் நேற்று வட்டமிட்டு இப்பகுதியை சுற்றிப் பறந்தன. இடையிடையே சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தன, வல்வை இராணுவ முகாமிலிருந்தும் மோட்டார் ஷெல்கள் பிரயோகிக்கப்பட்டன அதே நேரத்தில் வல்வை இராணுவ முகாமுக்கு நேராகக்கடலில் நிலைகொண்டுள்ளகடற்படைப் பீரங்கிப் படகிலிருந்து தொடர்ச்சியான பீரங்கி வேட்டுத் தாக்குதல், இடம்பெற்றன இதனிடையே வல்வை இராணுவ முகாமில் இறங்கமுயற்சித்த ஹெலிகொப்டர் மீது போராளிகள் தாக்குதலை நடத்தினர்.

வல்வை இராணுவ முகாமிலிருந்துவந்துவிழுந்து வெடித்த இரு ஷெல்களினால் இருபெண்கள் உட்பட ஆறுபேர் காயமுற்றனர்.

வல்வை சடையாண்டி கோவிலடியிலுள்ள வீடு ஒன்றில் ஷெல்விழுந்ததில் திருமதி எஸ் ஆறுமுகம்[38வயது]என்பவரும்,அவ்வீட்டிலிருந்த சிறுமி விஜயா (16 வயது) என்பவர் பலத்த காயங்களுக்குள்ளாயினர். இவர்களை உடன் மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர், இச்சிறுமி அங்கு மரணமானார்.

இதன் பின் போராளிகள் ஹெலிகொப்டர்கள் மீது எதிர் தாக்குதலை நடத்தினர் சிறிது நேரத்தில் ஹெலிகொப்டர்கள் வந்த திசை சென்றன. கடற்படைப் படகும் மேற்கு நோக்கி வேகமாக சென்றது.

இதேவேளை முருகையன் கோவிலடி குடியேற்றப் பதியிலும் ஷெல் தாக்கியதால் நால்வர் காயமடைந்துள்ளனர்.

# புலிகள்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
நேற்றுக்காலை 11 மணி 30 நிமிடம் அளவில் பரவிப்பாஞ்சான் எனும் இடத்தில் இராணுவத்தினருக்கும் எமது வீரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட நேரடி மோதலின்போது பல இராணுவத்தினர் பலியானதுடன், பலர் காயப்பட்டனர். இச் சம்பவத்தின் போது எமது வீரர்களான குட்டித் தம்பா, கிரோராஜ், தீசன் ஆகிய மூவரும் பலியானார்கள்.

கரடிப்போக்கு என்னுமிடத்தில் நிகழ்ந்த நேரடி மோதலின்போது பல இராணுவத்தினர் பலியானதுடன். பலர் காயமடைந்தனர். இச்சம்பவத்தின்போது எமது வேங்கை சசி வீரமரணமடைந்தான்.

கடந்த 4ம் திகதி இராணுவத்தினருடனான நேரடி மோதலின் போது எமது வீரனான ஆனந்தன் வீரமரணமடைந்தான். இவ் நேரடி மோதல்களின் பின்னர் இராணுவம் தமது முகாம்களுக்கு திரும்பினர். (மா

# பண்ணை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வீடுகள் பலத்த சேதமடைந்தன. யாழ் 3ம் குறுக்குத் தெருவிலுள்ள வீட்டின் யன்னல் கண்ணாடிகளும் 'ஷெல்' தாக்குதலால் சேதமடைந்ததுடன் பலர் காயமுற்றனர்

இச் சம்பவத்தின்பின்னர் பலாலி முகாமிலிருந்து ஹெலிகொப்டர் ஒன்று பறந்துவந்து மண்டைதீவுச் சந்தியில் உள்ள மினிஇராணுவ முகாமில் இறங்கி சிலநிமிடம் தரித்து நின்றுவிட்டு பின்னர் திரும்பவும் பலாலி முகாம் நோக்கிப் பறந்துசென்றது.

பண்ணையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சமரில் பலியான இராணுவத்தினரையும் படுகாயமடைந்தவரையும் பலாலி முகாமுக்கு எடுத்துச் செல்வதற்காகவே இக்ஹெலிகொப்டர் மண்டைதீவுச்சந்தியில் உள்ள இராணுவமுகாமில் இறங்கிச் சென்றதாகக் கூறப்படுகிறது. [மா]

# "வானில் வந்தபோது 'ஹெலி' துரத்திச் சுட்டது"

[யாழ்ப்பாணம்]
"பலாலியில் அடகுநகைகளை மீளப்பெற்றுக்கொண்டு வானில் சென்ற சமயம் ஹெலிகொப்டர் சுட்டதனால் நால்வர் காயமடைந்தோம் அதில்இவர்கள் இருவரும் இறந்து விட்டார்கள்"

பாலாலி சம்பவத்தில் பலியான இருவரின் மரணவிசாரணையில் சாட்சியமளித்த காயமடைந்த ஆனந்தவடிவேல் இவ்வாறு கூறினார்.

இச்சம்பவத்தில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எஸ். சின்னராசா (46வயது] கம்பர் மலையைச்சேர்ந்த வ இரத்தினசிங்கம் ஆகியோர் மரணமானார்கள்.

யாழ். பதில் நீதவான் க. கேசவன் மரணவிசாரணை நடத்தினார்.

ஆனந்த வடிவேல் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:

"பலாலி இராணுவமுகாமில் அடகு நகைகள் வழங்கப்பட்டன. சம்பவதினம் நண்பகல் நகைகளைப் பெற்ற பின தோலகட்டி வந்து அங்கிருந்து வான் மூலம் புறப்பட்டோம். இறந்தவரான இரத்தினசிங்கம் எனக்கருகில் இருந்தார்.

"பலாலி முகாம் பக்கமாக துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது ஒட்டகப்புலம் சந்திக்கு வந்தபோது ஹெலிகொப்டர் துரத்திச் சுட்டது. அச்சுவேலிவரை தொடர்ந்து சுட்டது எனக்குக் காயமேற்பட்டது. இரத்தினசிங்கத்துக்கு தலையிலும், சின்னத்துரைக்கு நெஞ்சிலும் காயமேற்பட்டது. இருவரும் ஆஸ்பத்திரியில் மரணமானார்கள்,

பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. [க]

# காயமடைந்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி]
புதுக்குடியிருப்பு], நல்லையா மணிராஜ் [2 வயது,கிளிநொச்சி எஸ். முத்துக்குமார், [13, வயது கிளிநொச்சி] ஆகியோர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### வல்வெட்டித்துறையில்

வல்வெட்டித்துறையில் நேற்று இடம் பெற்ற ஷெல் தாக்குதலில் காயமடைந்து நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரியில் இருவர் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

தெ. இராசபரமேஸ்வரி [26 கம்பர்மலை] சுதன் 20 வயது வல்தெட்டி] ஆகியவர்களே காயமடைந்தவர்களாவர்.

# சீக்கியகிளர்ச்சியாளர் எச்சரிக்கை

புதுடில்லி, ஜூன் 7'
இந்திய மத்திய அரசின் எல்லா அங்கத்தவர்கள் உட்பட பஞ்சாப்மாநில முதல்வர், பிராந்திய பொலிஸ் தலைவர் அனைவரையும் தாம் கொலை செய்யவுள்ளதாக சீக்கியகிளர்ச்சியாளர்கள் எச்சரிக்கை ஒன்றினை விடுத்துள்ளனர்.

இந்திய பந்தோபஸ்துப் படையினரால் சீக்கிய பொற்கோவில் தாக்கப்பட்டதைக் குறிக்கும்இரண்டாண்டுபூர்த்தி நாள் நேற்று முன்தினமாகும். இதனையொட்டி சீக்கியக் கிளர்ச்சியாளர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றினை பொற்கோவில் நோக்கிமேற்கொண்டிருந்தனர். இந்த ஆர்ப்பாட்ட ஊர்வல இறுதியில் இடம்பெற்ற கூட்டமொன்றிலேயே இவ்வெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# 12ம், 13ம் திகதிகளில் கடையடைப்பு

[யாழ்ப்பாணம்]
யாழ். ஸ்ரான்லி வீதி, பொ. சோமசுந்தரம் அன்கம்பனி, அசோஸியேட்டட் மோட்டோர்ஸ் அன் எலக்றிக்கல் நெஷனல் மோட்டோர்ஸ் ஆகிய மூன்று ஸ்தாபனங்களும் பூட்டப்பட்டிருப்பதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் இம்மாதம் 12ம் 13ம் திகதிகளில் பூரண கடையடைப்புச் செய்வதென யாழ். வர்த்தகசங்கம் தீர்மானித்துள்ளது (ஐ)

## கடைசிநேர வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

த. தில்லையம்பலம் என்பவருடைய இல 250561555 U அடையாள அட்டை மன்னாரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் K. குணரட்னம் தபால் கந்தோர், மன்னார் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (C 2772]

### வெலிங்டன்

10-30, 2-30, 6-15
மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர் நடித்த
**விதி**
(கலர் - புதிய பிரதி)

### லிடோ

காலை 1 0-30 2-30, 6-30
கமல்-ரஜனி-ஸ்ரீதேவி-ஜெய்கணேஷ்-நாகேஷ் நடித்த
**தாயில்லாமல் நானில்லை**
(கலர்)

### லிபேட்டி சினிமாவில்

[வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்]
Jim Brown நடித்த
**Dack of the Sun**
பொம்பர்தாக்குதல், பயங்கர இராணுவ அணிகளின் தாக்குதல்களின்மத்தியில் பெரிய தொகையான வைரங்களைக்கடத்தும்பயங்கர யுத்தப் படம்.

## மருந்தாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் மருந்தகம் ஒன்றுக்கு மருந்தாளர் ஒருவர் (PHAMIST) தேவை. யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவராக இருக்க வேண்டும். முன் அனுபவமுள்ளவர்கள் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

**கமல் சேவிஸ்,**
டில்கா கிறீர் ஹவுஸ் மேல் மாடி,
பஸ்நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம்.
(C 2774)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
ஞாயிற்றுக்கிழமை 8-6-86

# கொழும்பு குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 'இன்ரசிற்றி' இரு பெட்டி சேதம்

## பாதுகாப்பு ஊழியர் இடைநிறுத்தம்

[கொழும்பு]

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களால் நகரில் பெரும் பதற்றம் நிலவியது.

தெமட்டகொடை ரயில் நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த 'இன்ரசிற்றி' ரயிலில் குண்டொன்று வெடித்தளால் இரு பெட்டிகள் முற்ருகச் சேதமடைந்தன. இருவர் காயமடைந்தனர். இச்சம்பவத்தைத் தொடர்ந்து ரயில் நிலைய பாதுகாப்பு ஊழியர்கள் சிலர் வேலையிலிருந்தும் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

முதலாவது குண்டுதெமட்டகொட ரயில் நிலையத்திலும், இரண்டாவது குண்டு கொட்டாஞ்சேனை சிவன்கோவிலிலும் வெடித்துள்ளன.

தெமட்டகொடை ரயில் நிலையத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கொழும்பு-யாழ்ப்பாணத்துக்கான 'இன்ரசிற்றி' ரயிலின் இரண்டு பெட்டிகள் முற்ருக சேதமடைந்துள்ளன. இருவர் பலத்த காயமடைந்துள்ளார்கள்.

### கொட்டாஞ்சேனை சம்பவம்

இதேவேளை இனந்தெரியாத நபர் ஒருவரினலேயே கொட்டாஞ்சேனை சிவன் கோவிலுக்குக் குண்டு வீசப்பட்டதாகவும் இச்சம்பவத்தில் பாடசாலை மாணவரொருவர் சிறு காயமடைந்ததுடன் கோவிலுக்கருகில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வான் ஒன்றும் சேதமாக்கப்பட்டுள்ளது.

இந்தக்குண்டுவெடிப்புச் சம்பவங்கள்குறித்த காரணங்கள் பற்றி உடனடியாக எதுவும் கூறமுடியாதென்று தெரிவித்த பொலிஸ்வட்டாரங்கள் இவைகளுக்குத் தமிழ்த் தீவிரவாதிகளே பொறுப்பாக இருக்கலாம் என்றும்தெரிவித்தன.

### பாதுகாப்பு அதிகாரிகள் வேலையிலிருந்து இடைநிறுத்தம்

இந்தக்குண்டு வெடிப்புச் சம்பவத்தைத்தொடர்ந்து புகையிரத பாதுகாப்பதிகாரிகள் சிலர் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்கள். போக்குவரத்து அமைச்சர்அல் ஹாஜ்எம். எச். முகமதின் பணிப்புரையைத் தொடர்ந்து இந்தநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## அராலி-வடக்கு நீர் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

அராலி-வடக்கு குடிநீர் விநியோகம் தொடர்பாகப் பிரஜைகள் குழு சமர்ப்பித்துள்ள மகஜரில் அடங்கியுள்ள விடயங்கள் குறித்து எதிர்வரும் 11-ம் திகதி புதன்கிழமை யாழ் செயலகத்தில் விசாரணை நடைபெறவிருப்பதாகத் தெரிகின்றது

அடிக்கடி சீர்குலைவடையும் அராலி-வடக்கு குடிநீர் விநியோகம் தொடர்பாக அராலி பிரஜைகள் குழு அண்மையில் மகஜர் ஒன்றை அரசாங்க அதிபரிடம் கையளித்தார்

மாசி மாதம் தொடக்கம் சித்திரை மாதம் வரைக்கும் நீர் விநியோகம் தடைபட்டிருந்ததுடன், இப்பொழுதும் தொடர்ந்தும் அடிக்கடி தடைபடுவதாகவும் தெரிவித்துள்ள பிரஜைகள் குழுவினர் நீர் நிர்வாகத்தினர் பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்வதே இதற்குக் காரணம் என்றும் தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

## போராளிகள் நினைவு சுடர்

[யாழ்ப்பாணம்]

தமிழீழ மாணவர் பேரவையினரால் நடாத்தப்பட்ட போராளிகள் தின நினைவுச் சுடர் யாழ் நவீனசந்தைக்கு முன்பாகவுள்ள போராளிகள் நினைவுத் தூபியில் நேற்று மூன்ருவது தினமாக ஒளி ஏற்றி வைக்கப்பட்டது, [வா]

## "யாழ் நீதிமன்ற தெற்கு எல்லையில் நின்றபோது சுடப்பட்டார்"

### மரணவிசாரணையில் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

'யாழ். நீதவான் நீதிமன்ற தெற்கு எல்லை வாசலில் பிரதான வீதிக்கு சமீபத்தில் ஒருவர் நின்று கதவைத் திறக்கும்படி கத்தினர். அதைப் பார்த்த நான் 'விழுந்து படுங்கள்' என்று உரத்த குரலில் கூறினேன் அவர் படுக்குமுன் துப்பாக்கிச் சூடுபட்டு இருந்துவிட்டார். பின் அவரை நீதிமன்ற அலுவலகத்திற்குள் தூக்கி வந்து முதலுதவி அளித்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பினேம் அங்கு அவர் இறந்துவிட்டார்'

யாழ். நீதிமன்றத்திற்கு அருகில் துப்பாக்கிச் சூட்டினல் பலியான சுழிபுரத்தைச் சேர்ந்த எஸ். இராமலிங்கத்தின் [60 வயது] மரண விசாரணையில் சாட்சியமளித்த சட்டத்தரணி க. சோமசுந்தரம் இவ்வாறு கூறினர்.]

யாழ். முதல் நீதிவான் க. கேசவன் மரணவிசாரணை நடத்தினர்.

அவர் மேலும் கூறியதாவது: "இம்மாதம் 2ம் தேதி வழக்கம்போல் யாழ். நீதிமன்றத்திற்குக் கடமையாற்ற வந்தேன். அப்போதுகோட்டைப் பக்கத்திலிருந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது. அச்சத்தினல் வீதியில் சென்ற பொதுமக்கள் பலர் நீதிமன்ற வளவினுள் தஞ்சமடைந்தனர்.

நான் காலை 9 மணியளவில் சட்ட நூலகத்திற்கு வெளியில் நின்றேன். அப்போது இறந்தவர் தெற்குப் பக்கத்தில் நின்று கதவைத் திறக்குமாறு கத்தினர். அப்போது அவர் சுடப்பட்டு காயமடைந்தார்''

திரு இ. சங்கர் சாட்சியமளிக்கையில்: இறந்தவர்மொழிபெயர்ப்புச் செய்வதற்காக நீதிமன்றம் சென்றதாகவும் மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையென்றும் கூறினர்

பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்திப் போடப்பட்டது. [க]

## வவனியாவில் அரச ஊழியர் வெளியேற்றம்

[யாழ்ப்பாணம்]

வவனியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை காரணமாக அரச ஊழியர்கள் பலர் தொடர்ந்து கடமையாற்ற அச்சம் கொண்டு வெளியேறிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் அரச ஊழியர்கள் சங்கும் விடுதி ஆயுதப்படையினரால் பலத்த சோதனையிடப்பட்டது என்றும்.அத்துடன் மதிய உணவுக்குச் சென்ற அரச ஊழியர் பலர் கடும் வெயிலில் முட்டுக்காலில் சில மணிநேரம் நிறுத்தி வைக்கப்பட்டனரென்றும் கூறப்படுகிறது. வவனியா வயிரவபுளியங்குளம் என்னுமிடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து அரச ஊழியர் அலரவாசிக்குமேல் நேற்று வெளியிடங்களுக்குச் சென்றுகொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது: [மா]

## கொழும்பில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தேடுதல் நடவடிக்கைகளின்போது ஒவ்வொரு தமிழ் வீடும் தீவிர சோதனைக்குள்ளானது இதனல் தமிழர்கள் வீடுகளில் பெரும் பதற்றம் நிலவியது.

வெளிநாடு செல்வதற்காகவும், வேலைவாய்ப்பு. உயர் கல்வி பெறுவதற்காகவும் கொழும்பு நகரில் தங்கியிருந்த பல யாழ்ப்பாண இளைஞர்களும், உத்தியோகத்தர்களும் கூட பொலிஸாரினல் கூட்டிச் செல்லப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு சம்பவமுமறியாத அப்பாவித் தமிழர்கள் தமக்கு நேர்ந்த இந்தக்கதிகுறித்து மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தமது பிள்ளைகளின் நிலைகுறித்து அறியும் பொருட்டு யாழ்ப்பாணத்திலுள்ள பெற்றோர் அவர்களுட எந்தவிதத் தொடர்பும் கொள்ளமுடியாத நிலையில் தொலைபேசித் தொடர்புகள் போக்குவரத்துத் தொடர்புகள் இன்றிபெரும்கவலையடந்துள்ளனர். [பி]

## க. பொ. த. (உயர்தர)ப் பரீட்சை

## வேம்படி, மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெருது

(யாழ்ப்பாணம்)

வேம்படி மகளிர் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி, ஆகிய இருபாடசாலைகளும இம்முறை க. பொ த. உயர்தர பரீட்சை மண்டபங்களாக நியமிப்பதில்லையென யாழ்ப்பாண கல்வித்திணைக்களம் தீர்மானித்துள்ளது

இப்பரீட்சை, எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது. நீண்டகாலமக இப்பாடசாலை மாணவர்கள் இக்கல்லூரியிலேயுள்ள மண்டபத்தில் பரீட்சை எழுதிவந்துள்ளனர். இம்முறை பாதுகாப்புக்காரணங்களுக்காகவே இந்நிலையங்களை இரத்துச்செய்துள்ளனர்.

இப்பாடசாலை மாணவர்களுக்கு வேறுபாடசாலைகள் வழங்கப்படும். [கெ]

## "நகைகளை மீளப்பெற பலாலி செல்லவேண்டாம்"

### சங்கம் வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

''பாதுகாப்பு சம்பந்தமான எந்தவொரு உறுதிப்பாட்டையும் வழங்க முடியாது இருப்பதனல் மறு அறிவித்தல் வரை எந்தவொரு வாடிக்கையாளரும் நகைகளை மீளப் பெற்றுக் கொள்வதற்காக பலாலி இராணுவ முகாமிற்கு செல்லவேண்டாம்'' என்று அடகு வைத்தோர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

அத்துடன் பலாலியில் அடகுநகைகளை மீளப்பெறச் சென்றபோது ஏற்பட்ட அனர்த்தத்தின் விளைவாக பலியான, காயமடைந்த குடும்பத்தினருக்கும் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதாக மேற்படி சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது;

அந்த அறிக்கையில் மேலும் ''அடுத்தவாரம் வங்கி நிர்வாகத்துடன் பாதுகாப்பு ஒழுங்குகள் பற்றி ஒரு உடன்பாடு ஏற்பாடு செய்தபின்னர் மேற்படி விநியோகத்திற்கான திகதி அறிவிக்கப்படும். அத்துடன் சங்கத்தின் இத்திடீர் முடிவினை கருத்திற்கொண்டு வங்கி நிர்வாகம் தனது நடவடிக்கைகளை மாற்றியும், பாதுகாப்பான வழியில் துரிதப்படுத்த வேண்டும் என சங்கம் கேட்டுங் கொள்கின்றது'' என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

## வெளியூர் தொலைபேசி பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் குடாநாட்டிலிருந்து வெளியூர்களுக்கான சகல தொலைபேசித் தொடர்புகளும் நேற்று முன்தினம் முதல் பழுதடைந்துள்ளன. கிளிநொச்சி தொலைதொடர்பு பிரிவில் ஏற்பட்ட பாதிப்பே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. (க)

## இயக்கச்சி வரை பஸ் சேவை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று இயக்கச்சிவரை பட்டும் வ. பி. போ ச. பஸ் சேவை நடைபெற்றது. இரு பஸ்கள் நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து இயக்கச்சி சென்றன.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126,

## மரண அறிவித்தல்

### அல்ஹாஜ் அப்துல் காதர்ஸாஹிப்

இவர் மர்ஹூம் செயினபாவின் அன்புக் கணவரும், M இஸ்ஸதீன் (J P) டீன்ஸ் ரெயிலரிங், யாழ்ப்பாணம் அவர்களின் மாமனருமாவார். ஜனஸா நல்லடக்கம் இன்று காலை 10 மணிக்கு நடைபெறும்.

M இஸ்ஸதீன் J. P., சோனகதெரு.

(C 2773)

### ஆறுமுகம் செந்தில்நாயகம்

[மருந்து கலவையாளர்]

83/2 ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த ஆறுமுகம் செந்தில்நாயகம் காலமாகிவிட்டார். இவர் சரஸ்வதியின் அன்புக்கணவரும், பிரியதர்சினி, ராஜமோகன் [பிரான்ஸ்] உசாறஞ்சினி, திருமதி உமாதேவி [சிங்கப்பூர்], சிவமோகன் ஆகியோரின் அன்புத் தகப்பனும், திரு. மகோற்கடாமூர்த்தி [விவேகானந்தா வித்தியாலயம், கொழும்பு], மனோ [சிங்கப்பூர்] ஆகியோரின் மாமனருமாவார்.

அன்னரின் ஈமக்கிரியைகள் இன்று பி.ப. 2 மணிக்கு நடைபெற்று கொச்குவில் கணக்கமடத்தடி மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

(C2775)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org